# தமிழரசு

1-5-1981 50 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012 துன்மதி சித்திரை 19









# டாக்டர் அம்பேத்கார்

## 91-வது பிறந்த நாள் விழா


14-4-1981

கலைவாணர் அரங்கம்

சென்னை





# தமிழ்நாட்டில் தன்னிறைவுத் திட்டம்



## மாண்புமிகு முதல்வர்

**நா**டு விடுதலை பெற்ற நாளிலிருந்து கிராம முன்னேற்றம் பற்றிய சிந்தனை வளர்ந்து பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டபோதிலும் காந்தியடிகள் காணவிழைந்த ''பொருளாதார வளர்ச்சியடைந்த, சுய தேவைகள் பூர்த்தியடைந்த வளங்கெழு கிராம ஆட்சி'' முகிழ்க்கவில்லை.

இந்நிலை மாற வேண்டுமென்ற எண்ணம் என் உள்ளத்தில் பெருங் கவலையை ஏற்படுத்தியது. இன்றைய உலகின் வளர்ச்சியை, வசதி வாய்ப்புகளை அறியாத மக்களின் வளர்ச்சி பற்றி நாம் பேசிக் கொண்டு மட்டும் இருப்பதில் பயனில்லை. ''சிற்றூர்கள் பெற்றிடும் வளர்ச்சியே சமுதாய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். நாட்டின் நல்வாழ்வு எழுச்சிக்கும் அஃதே அடையாளமாகும்'' என்று குறிப்பிட்டார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில்தான் தன்னிறைவுத் திட்டம் செம்மையாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டியது அவசரப் பணியாகும். இந்தக் குறிக்கோளோடு வகுக்கப்பட்டதுதான் கிராமத் தன்னிறைவுத் திட்டம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும் வட்டாரங்களில் 69 வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் முதற்கட்டமாகத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் நோக்கமாகும். குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக் கட்டட வசதி, தாய்-சேய்-நலநிலைய ஊரக மருந்தக வசதி, கிராமப்புற மின்வசதி முதலியவற்றை நிறைவேற்றிக் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து தன்னிறைவு பெற்ற கிராமங்களாகத் திகழச் செய்ய வேண்டுமென்ற முனைப்போடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் இந்த உயரிய நோக்கத்தினை உணர்ந்து இடர்களைப் பொருட்படுத்தாது அயராது உழைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா வட்டாரங்களிலும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு கிராம மறுமலர்ச்சி கண்ட தமிழகம் உருவாகிடும் நாளே, அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கண்ட கனவை நனவாக்கும் புனிதத் திருநாளாகும்.

1-5-1981
தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி சித்திரை 19
தன்னிறைவுத் திட்டச் சிறப்பிதழ்
மலர் 11. இதழ் 21

# தொழிலே வாழி நீ!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்



தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ
எழில்லைஉலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!

*

இந்தவான், மண், கனல், எரி, வளி தோன்றா
அந்தநாள் எழுந்தஓர் "அசைவி"னால்வானொடு
வெண்ணி லாவும், விரிகதிர் தானும்,
எண்ணிலா தனவும் எழுந்தன வாகும்.
அணுத்தொறும் இயங்கும்அவ் வசைவியக் கத்தைத்
துணிப்பிலா இயற்கையின் தொழிலெனச் சொல்வர்
அழியா தியங்கும்அவ் வசைவே மக்களின்
தொழிலுக்கு வேறெனச் சொல்லினும் பொருந்தும்.
ஆயினும் உன்னினும் அதுசிறந் ததன்று
தாயினும் வேண்டுவது தந்திடுந் தொழிலே!

*


மக்களின் தேவை வளர்ந்திடும் அளவுக்குத்
தக்க வாறு தளிர்த்திடு கின்ற
அறிவிலே தோன்றுவை; அந்தோள் தழுவுவை;
மறுவிலாக் கருவியில் வாய்விட்டுச் சிரிப்பை;
பொருள்பல நல்கிஅப் பொருள்தொறும்கலைத்திறம்
அருள்புரிந்து குறைபா டகற்றுவை தொழிலே!


*

பசித்தவன் புசித்திடப் பறப்பது போன்றஓர்
அசைப்பிலா ஆவலும், அசைப்பிலா ஊக்கமும்
அடைந்தோர்உனைத் தம் ஆயிரம் ஆயிரம்
தடந்தோள் தழுவியே கடந்தனர் வறுமை!

தொழிலே காதுகொடு! சொல்வேன்! எங்கள்
அதிர்தோள் உன்றன் அழகிய மேனி
முழுதும் தழுவமுனைந்தனர் பார்நீ!
அழகிய நாட்டில் அந்நாள் இலாத
சாதியும் மதமும் தடைசெயும் வலிவிலே
மோதுதோள்அனைத்தும் மொய்த்தன ஒன்றாய்க்
கெண்டை விழியாற் கண்டுகொள் தொழிலே
வாராய் எம்மிடை வாராய் உயிரே!
வாராய் உணர்வே! வாராய் திறலே!

அழு[illegible]லோம் இருப்புக் கலப்பை துடைத்தோம்
மலையெனச்செந்நெல் வழங்களம் தோளில்வா!
கரும்பாலைக்குக் கண்ணெலாம் நெய்யிட்
டிரும்பாலைக்கு வரும்பழு தகற்றினோம்
பண்டம்இந் நாட்டிற் பல்க மகிழ்ந்துவா!






# தமிழ்நாட்டில் தன்னிறைவுத் திட்டம்



மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

**திரு ப. குழந்தைவேலு**




## ஒரு புதிய வரலாறு

**அறிமுகம்:**

பரந்து விரிந்த நம்நாட்டில், ஆங்காங்கேத் தனித்தீவுகளாக அமைந்துள்ள கிராமங்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கும் உயர்நோக்குடன் ஒருங்கிணைந்த ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவே சமுதாயநலத் திட்டம். கிராம வாழ் மக்கள், பொருளாதார முன்னேற்றம் அடைய, வேளாண்மையிலும் கால்நடை மேம்பாட்டிலும், அறிவியல் ஆற்றலுடன் கூடிய புதிய முறைகள் 'சமுதாய நல திட்ட வட்டாரங்கள்' மூலம் புகுத்தப்பட்டன. குடிசைத் தொழில்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவை ஊக்குவிக்கப்பட்டன. மக்களிடையே சமுதாயப்பொறுப்புணர்ச்சிகளும், விழிப்புணர்ச்சிகளும் [illegible]ளர்வதற்காகச் 'சமூகக் கல்வித் திட்டங்'கள் முனை[illegible] செயல்படுத்தப்பட்டன. மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதிகள், பள்ளிக் கட்டிடங்கள், சாலை வசதிகள் ஆகியவைகள் வட்டாரங்கள் வழியாக செய்து தரப்பட்டன. இத்திட்டம் ஏறத்தாழ கடந்த 30 ஆண்டுகளாக நிறைவேற்றபட்டிருப்பினும் இன்னமும் மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை.

**தன்னிறைவுத் திட்டத்தின் பின்னணி:**

சில குடங்கள் குடிநீரைக் கொண்டு வருவதற்கு பல கல் தொலைவு நடக்க வேண்டிய கிராம மகளிரின் அவல நிலையையும், 'கட்டிடம்' என அழைக்க இயலா கட்டிடங்களிலிருந்து கல்வி பயில வேண்டிய கட்டாயத்திற்குள்ளான-கிராம வாழ் இளஞ்சிறார்களையும், உழைத்து விளைவித்த பொருள்களை விற்பனை செய்வதற்கு சாலையின்றி பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டிய இக்கட்டான நிலைக்கு உட்படும் கிராம வாழ் மக்களின் இன்னல்களையும், இடர்ப்பட்டு நின்ற மக்களையும் கண்டு, அவர்கள் வாழ்வில் புதிய வரலாற்றைத் தோற்றுவிக்கும் எண்ணத்துடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டதே 'தன்னிறைவுத் திட்டம்' எனும் தன்னிகரில்லாத் திட்டமாகும். குறிப்பிட்ட கால அளவிற்குள் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவுடன் ஏற்படுத்திக் கொடுப்பதே இத்திட்டத்தின் அடிப்படை இலட்சியம்.

**தன்னிறைவுத் திட்டவழி முறைகள்:**

தேவைகள் விரிவானவை; எண்ணற்றவை; நமது கிராமப் புறங்களும், இதற்கு விதி விலக்கல்ல. நிதி வசதிதான் நம்முடைய குறிக்கோள்களைக் குறைக்கும் வகையில் இடையூறாக உள்ளது. எனினும் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக குடிநீர் வழங்குதல், சிறு பாலங்கள் உட்பட, இணைப்புச் சாலைகள் இடுதல், ஆதிதிராவிட குடியிருப்புக்களுக்கு மயான சாலை வசதிகள் அமைத்தல், சிறு பாசன அமைப்புக்களை மேம்படுத்துதல் தவிர, கிராம மருந்தகங்கள், தாய்-சேய் நல நிலையங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆதிதிராவிட மக்களுக்காக வீடுகள் கட்டுதல் ஆகியவை அமைகின்றன.

**அடைய வேண்டிய எல்லை:**

இத்திட்டத்தை நிறைவேற்றத் தொடங்குமுன் 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு-இனி நாம் அடைய வேண்டிய எல்லையைச் சுட்டிக் காட்டியது— செல்ல வேண்டிய பயணத்தைக் கணக்கிட்டுக் காட்டியது அவை.....

## குடிநீர் வழங்குதல்:

தமிழ்நாட்டிலுள்ள 47075. குடியிருப்புகளில், 12603 குடியிருப்புகளுக்கு இன்னும் குடிநீர் வசதி செய்து தர வேண்டியதாயிற்று. அக்குடியிருப்புகளில் நீர் தரும் நிலைகளின் அடிப்படையில், குடியிருப்புகள் ஆறுவகையாகப் பிரிக்கப்பட்டு அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடிதண்ணீர் குறைவின்றி வழங்கும் தன்னிகரற்ற பணியை மூன்றாண்டு கால அளவிற்குள் நிறைவேற்றி முடிக்கும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இணைப்புச் சாலைகள்:

எத்தனையோ சாலைகள் எந்தவொரு வாகனமும் செல்ல இயலாமல் அமைந்தவை. பெருவழியிலிருந்து கிளையாக வளைந்து வளைந்து வரப்புகள் நடுவே நடந்து நடந்து உருவான ஒற்றையடிப் பாதைகளே ஊரை இணைக்கும் சாலைகளாக உள்ளன. இத்தகைய கிராமங்கள் அனைத்திற்கும் இணைப்புச் சாலை வசதிகள் நன்முறையில் அமைப்பது மட்டுமின்றி, தற்போதுள்ள சாலைகளை எல்லா பருவங்களிலும் பயன்படுமாறு செய்யவேண்டுமெனவும் கருதப்படுகிறது. மக்கள் தொகை 500 வரை கொண்ட குடியிருப்புகளுக்கு, முரம்பு பரப்பிய சாலைகள் 12,264 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படும்.

500 முதல் 1500 வரை மக்கட் தொகை கொண்ட கிராமங்களைப் பொறுத்தவரையில், 'சரளை'க் கற்களால் சாலைகள் மொத்தம் 17,302 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படும்.

## சிறு பாலங்கள்:

இணைப்புச் சாலைகளில் குறுக்கிடும் வடிகால்களைக் கடப்பதற்காக 27718 சிறு பாலங்கள் கட்டி முடிக்கப்படும்.

## ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயான சாலை வசதிகள்:

மயானங்களுக்கு இறந்தவர் உடலை எடுத்துச் செல்ல நல்ல சாலை வசதி இன்மையால், முட்புதர்களையும், ஒற்றையடி வயல் வரப்புகளையும், இடுப்பளவு நீரையும் கடந்து செல்ல வேண்டிய துயரமான நிலை சில ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பொதுவாகக் காணக் கூடியதே! அந்த நிலையை அகற்ற, மொத்தம் 5,268 கி.மீ. நீளத்திற்கு மயான சாலைகள் அமைக்கப்படும்.



## பள்ளிக் கட்டிடங்கள்:

மொத்தமுள்ள 23,257 தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளிகளில், 2,572 ஒன்றியப் பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களிலும், ஓலைக் கூரைகளின் கீழும் நடைபெறுகின்றன. எனவே, இத்தகைய பள்ளிகளுக்காக 2,572 பள்ளிக் கட்டிடங்கள் கட்ட திட்டமுண்டு. மேலும் போதிய அளவு இட வசதி இல்லாத பள்ளிகளுக்காக 4,561 கட்டிடங்கள் கூடுதலாகக் கட்டப்படும்.

## சிறு பாசன திட்டம்:

12,226 சிறு பாசன குளங்களை (ஒவ்வொரு குளமும் நூறு ஏக்கர் பரப்பிற்குத் குறைவான நிலங்களுக்கு நீர் வழங்குபவை) தொடர்ந்து பயன்படுதது்் வகையில் உரிய மேம்பாடுகள் செய்யப்படும்.

## ஊர்ப்புற மருநதகங்கள் மற்றும் தாய் சேய் நல விடுதிகள்:

இவை தற்போது பெரும்பாலான கிராமங்களில் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. 455 ஊர்புற மருந்தகங்களுக்கும், 1,262 தாய் சேய் நல விடுதிகளுக்கும் கட்டிடங்கள் கட்ட தன்னிறைவுத் திட்டம் வகை செய்கிறது.

## ஆதிதிராவிடாகளுக்கு வீடுகள்:

ஆயிரக்கணக்கான ஆதிதிராவிட குடும்பங்கள் சொந்த வீடின்றி சிறுகுடிசைகளில் வாழ்கின்றனர். இவர்கள் கூட்டுறவு வீட்டு வசதிக் கடன் திட்டத்தில் உதவிபெற்று, வீடுகள் கட்டிக் கொள்ள ஊக்குவிக்கப்படுவர்.

## செயல்முறை:

இம்மாபெரும் தேவைகளை வழக்கம் போல் அணுகி, நிறைவேற்றத் தொடங்கினால் அவற்றினை முடிக்க பல ஆண்டு காலங்கள் தேவை. தேவைகள் அதுவரை காத்திரா! எனவே, கிராமங்களில் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து அவற்றினைத் தேசிய நீரோட்டத்துடன் இணைப்பதே தற்போதைய தலையாயப் பணியாகும். அதற்கேற்ப இத்திட்டங்களை 1980-81ல் தொடங்கி, மூன்று அல்லது நான்காண்டு கால அளவிற்குள் செய்து முடிக்க, முடிவு செய்யப்பட்டது. 69 வட்டாரங்கள் முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. தன்னிறைவுத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டு கிராமப் புற ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு நல்கி, அதே

வேளையில் அவ்வேலை வாய்ப்புகள் மூலம் அவர்களின் அடிப் படைத் தேவைகளையும் தீர்த்து வைக்கும் எண்ணத்துடன் தீட்டப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 1981-82ஆம் ஆண்டில் 150 ஒன்றியங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டன. எஞ்சிய 157 ஒன்றியங்கள் 1982-83ஆம் ஆண்டில் இத் திட்டத்தை எதிர்நோக்கும்.

மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இரு முறை நடத்தப்பெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் பிற அமைச்சர் பெருமக்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு இத்திட்டத்தின் இலட்சியம், செலவு, கால அளவு தேவைப்படும் அலுவலர்கள், பொருள்கள், ஒன்றியங்களின் நிதி நிலைமைகள், அரசு நடைமுறைகளுக்கு தேவைப்படும் மாறுதல்கள் போன்றவை ஆராயப்பட்டு, உடனுக்குடன் முடிவுகளெடுத்ததிலிருந்தே, இத்திட்டத்திற்கு அரசு அளித் துள்ள முதன்மையிடம் தெள்ளென விளங்கும். குறிப்பிட்ட கால அளவிற்குள் திட்டத்தை நிறைவேற்றி முடிக்க இய லாது என்ற எண்ணம் நிலவியது. தளரா முயற்சி, தங்கு தடையற்ற உழைப்பு தியாக உணர்வுடன் இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு—சிமெண்ட், இரும்பு, குழாய்கள் போன்ற பொருள் கள் கிடைக்கவில்லை என்ற குறையைச் சுட்டிக் காட்டாமல் அவற்றைப் பெற வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டு, பெற்று, குறிப்பிட்ட கால அளவிற்குள் இத்திட்டம் நிறை வேற்றப்பட்டு முடிக்கப்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டிய ஆர்வம், 'இயலாது' என்ற எண்ணத்தை 'இயலும்' என மாற்றியது.

**நிதி:**

1982-83 முடிவு வரை 376 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மொத்தம் இத்திட்டத்தின் கீழ் ரூ. 290.00 கோடி தேவைப் படும். முதல் கட்ட நிறைவேற்றத்திற்கான தொகை ரூ. 45.41 கோடியின் விவரம் வருமாறு:

(ரூபாய் இலட்சங் களில்)

| | | | |
|---|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கும் திட்டங்கள் | ... | 2,100.00 |
| 2. | இணைப்புச் சாலைகள் | ... | 1,221.00 |
| 3. | சிறுபாலங்கள் | ... | 138.00 |
| 4. | ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயானப் பாதை வசதி | ... | 143.00 |
| 5. | சிறு பாசன திட்டங்கள் மேம்பாடு | ... | 23.00 |
| 6. | ஊர்ப்புற மருந்தகங்கள் | ... | 28.40 |
| 7. | தாய்சேய் நல விடுதிகள் | ... | 91.00 |
| 8. | பள்ளிக் கட்டிடங்கள் | ... | 545.00 |
| 9. | ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள் | ... | 252.00 |
| | | | 4,541.40 |



**ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கடன் உதவி:**

இத்திட்டத்திற்கான செலவுல் 5 முதல் 60 விழுக்காடு வரை ஊராட்சி ஒன்றியங்கள் அவைகளின் நிலைக்கு ஏற்றவாறு அவற்றின் பங்குத்தொகையாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இதற்கிணங்க, ஒவ்வொரு ஒன்றியமும் அதன் பங்காக பல இலட்சம் வரை ஏற்கவேண்டியுள்ளது. இத்தகைய மிகப்பெரும் முதலீட்டை ஏற்றுக் கொள்ள இயலா நிலையில், பல ஒன்றியங்களின் நிதி நிலை குறைவாக இருப்பதால், தம் பங்குத்தொகையைச் செலுத்துவதற்காக ரூ. 359 இலட்சம் வரை ஊராட்சி ஒன்றியங்களுக்கு கடனாக அரசு வழங்கியுள்ளது.

**புதிய திட்டங்கள்:**

தன்னிறைவுத் திட்டப் பணிகளோடு ஊராட்சி அலு வலகங்கள் மனமகிழ் மன்றங்கள் மற்றும் பெண்களுக்கான பொதுக் கழிப்பிடங்கள் ஆகியவை கட்டும் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுத் தன்னிறைவுத் திட்டம் சற்று விரிவு படுத்தப்பட்டது. சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் மனமகிழ் மன்றக் கூட்டங்கள், மகளிர் மன்றக் கூட்டங்கள், மற்றும் இளைஞர் சங்கக் கூட்டங்கள் போன்றவை நடத்து வதற்கு ஏற்ற வகையில் ஊராட்சி அலுவலகம்-மற்றும் மன மகிழ் மன்றக் கட்டிடங்கள் கட்ட வேண்டியது அவசியமா யிற்று. எண்ணற்ற சிற்றூர்களில் ஊராட்சிகள் சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. எனவே, முதல் கட்ட மாக ரூ. 15 இலட்சம் செலவில் 41 கட்டிடங்கள் கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட எடுத்துக்கொள்ளப்பட்டது. கிரா மங்களில் பெண்களுக்காக தனிமையான கழிப்பிட வசதிகள் இல்லாத நிலையை நீக்க, நீர் வசதியுள்ள இடங்களில் நான்கு அறைகள் கொண்ட இரு கழிப்பிடங்கள் கட்ட, தன்னிறைவுத் திட்டம் வழி செய்துள்ளது.

## கட்டுமானப் பொருட்களும் கனரக எந்திரங்களும்:

தேவைக்கேற்ப கட்டுமானப் பொருட்களும், கனரக எந்திரங்களும் தேவைப்படும் நேரத்தில் கிடைப்பதைப் பொறுத்தே இம்மாபெரும் திட்டத்தின் வெற்றி அமையும் எனக் கூறவேண்டியதில்லை. தன்னிறைவுத் திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களுக்கான பொருட்கள் மற்றும் எந்திரங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| | | முதல் கட்டம் | இரண்டாவது கட்டம் |
|---|---|---|---|
| 1. | சிமெண்ட் | 43,410 | 1,31,000 மெ.டன் |
| 2. | இரும்பு | 2,962 | 8,620 மெ.டன் |
| 3. | ஏ.சி. குழாய்கள் | 1,810 | 3,018 மெ.டன் |
| 4. | பி.வி.சி. குழாய்கள் | 2,600 | 5,700 மெ.டன் |
| 5. | ஜி.ஐ. குழாய்கள் | 13,322 | 18,628 மெ.டன் |
| 6. | சாலை உருளைகள் | 50 | 150 எண்கள். |

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், மேற்கொண்ட பெருமுயற்சிகளின் விளைவாக தேவையான சிமிண்ட்டும், இரும்பும் தேவைப்பட்ட அளவிற்குக் கிடைக்கப்பெற வழியேற்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் அமைச்சரின் பேருதவியால் நீர் வழங்கும் திட்டங்க்ளுக்கான குழாய்கள் மைய அரசின் உதவியோடு பெறப்பட்டன. சாலை விசை உருளைகளைப் பொறுத்தவரையில் நிதிநிலை நன்குள்ள ஒன்றியங்கள் அவற்றை வாங்குவதற்கு ஊக்குவிக்கப்பட்டன. மேலும், சில உருளைகளையும் கல் உடைப்பான்களையும் வாங்குவதற்கு, நெடுஞ்சாலைத் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



### நிர்வாகம் :

மாபெரும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், ஊராட்சி ஒனறியங்கள் அச்சாணியாகச் செயல்படுகின்றன. ஏறத்தாழ ஒவ்வொரு ஒன்றியமும் சுமார் ரூ.60 இலட்சம் மதிப்புள்ள பணிகளை ஏற்று நிறைவேற்றுகின்றன. இவற்றின் மதிப்பு அவை வழக்கமாக நிறைவேற்றும் பணிகளை விட ஆறு முதல் பத்து மடங்குகள் அதிகமானவையாகும். எனவே, வேலைப் பளு மிகுந்ததால் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு வட்டாரத்திலும், கோட்ட உதவிப் பொறியாளர் தலைமையில் சிறப்புப் பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உதவிப் பொறியாளர்களும், மேற்பார்வையாளர்களும் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு வட்டாரத்திலும் இத்திட்ட நிறைவேற்றத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் முழுக்கவனம் செலுத்துவதற்குகந்த முறையில் பிற பணிகளில் அவருக்கு உதவ ஒரு கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் எழுத்து, கணக்கு வேலைகளைக் கவனிக்க வட்டாரங்கள், கோட்டம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் எழுத்தர் மற்றும் கணக்காளர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, குறிப்பிட்ட கால அளவிற்குள் இத்திட்டத்தைச் செயலாக்க வட்டார அளவில் நிர்வாகத்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாநில அளவில் ஒரு இணை இயக்குநர் பதவி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்ட நிறைவேற்றத்தையும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகிய திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து சிறப்புத் திட்டப்பணிகளுக்கும் அவர் பொறுப்பு வகிப்பார்.

### தொழில் நுட்ப உதவிகள் :

உரிய தொழில் நுட்ப உதவிகளை உடனடியாக களப் பணியாளர்களுக்கு அளிப்பதைப் பொறுத்தே இத்திட்டத்தின் வெற்றி அமையும். தக்க உதவிப் பணியாளர்களோடு கோட்ட உதவிப் பொறியாளர் தலைமையில் இப்பணிகளை தொழில் நுட்பத்திறனுடன் மேற்பார்வையிட்டு வேலைகளை மேற்கொள்ள உட்கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மேற்பார்வை :

இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம் வாரம் ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், மாநில அளவில், மாதம் ஒரு முறையும் ஆணையர் மற்றும் அரசு செயலர், ஊரக உள்ளாட்சி துறை அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. திட்டத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாதந்தோறும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பல நிலைகளிலும் நடத்தப்படும் ஆய்வுகள் இத்திட்டம் தொய்வின்றி முனைப்புடன் செயல்படுத்தப்படவும், அவ்வாறு செயல்படுத்தும்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்கும் பெரும் உதவி புரிகின்றன.

### மாநில உயர்நிலைக் குழு :

இத்திட்டத்தை ஆய்வு செய்யவும், இத்திட்டத்தில்

ஈடுபட்டு நிறைவேற்றுகின்ற அனைத்துத் துறைகளுக்கும் இடையே ஓர் ஒருங்கிணைப்பை உருவாக்கவும், அரசுத் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாநில உயர்நிலை குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொடர்புடையத்துறை அரசுச் செயலாளர்கள் உறுப்பினர்களாகவுள்ள இக்குழுவின் அமைப்பாளராக ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் ஆணையாளர்—அரசுச் செயலாளர் அவர்கள் பணியாற்றுகிறார். இதே போல் மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் அரசு அலுவலர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாகக் கொண்ட மாவட்டக் குழுக்கள் இத்திட்டத்தை அவ்வப்போது ஆய்வு செய்கின்றன.

தன்னிறைவுத் திட்டம் செயலில் உள்ளபோதே அதனை உடனுக்குடன் ஆய்வு செய்யும் பொறுப்பு, ''மதிப்பீடு மற்றும் ஆய்வுத்'' துறை இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோட்ட உதவிப் பொறியாளர்-உதவிப் பொறியாளர் தலைமையில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பணியாற்றும் ''தொழில் நுட்ப ஆய்வுக் குழுக்களுக்கு,'' இத் திட்ட வேலைகளை, மேற்பார்வையிடுவதற்கும் மறு சோதனைச் செய்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.





## பிற திட்டங்களுடன் இணைந்து செயல் படுதல் :

அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கம் முடிந்து விடுவதில்லை. இந்த வசதிகள் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் குறிப்பாக மகளிர்க்கும் குழந்தைகளுக்கும் உரிய வழியில் பயன்படுவதற்கேற்ப தக்க முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## முடிவுரை :

சுருக்கமாகக் கூறினால், சமுதாயத்திலுள்ள அனைத்து பிரிவு மக்களுக்கும் உதவும் வகையில், ஒருங்கிணைந்த முன்னேற்றம் ஏற்படுவதற்காக அமைந்த இனிய திட்டமே தன்னிறைவுத் திட்டம். இப்புதிய மாபெரும் முயற்சியினால் கிடைக்கக் கூடிய பலன்களோ எண்ணற்றவை. அவற்றால் சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளோ கணக்கற்றவை. புத்துணர்ச்சியும் புதுப்பொலிவையும் நமது ஊர்ப்புறங்கள் இப்போது ஏற்று மிளிர்கின்றன. அடிப்படை வசதிகளை அளித்து, கிராமப்புற வாழ்வை, பொருள் பொதிந்த, விருப்பு மிகுந்த வாழ்வாக மாற்றியமைக்கும் தன்னிகரற்றத் திட்டமே 'தன்னிறைவுத் திட்டமாகும்'

# பாசன நீரை நவீனமுறையில் பயன்படுத்துதல்



மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

**கா. இராசாமுகமது**

நீர்வளங்களை அதிக அளவு நிலங்களுக்குப்பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதுதான் நம் அரசின் தலையாய கொள்கை. இதற்காக சிறியதாகவும் பெரியதாகவும் பல்வேறு திட்டங்களை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் தலைமையில் பொறுப்பேற்றுள்ள நம் அரசு மேற்கொண்டிருக்கிறது.

பாசன வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தி, பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கு ஈடு செய்யத்தக்க அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

புதிய நவீன விஞ்ஞான யுக்திகளைக் கையாண்டு நீர் வளத்தில் ஏற்படும் சேதாரங்களைத் தவிர்த்து அதைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும்.

புதிய திட்டங்களை உருவாக்கி பாசன வசதியை இதுவரை பெறாத நிலப்பரப்புகளைப் பாசனத் திட்டத்தின்கீழ் கொண்டு வருதல் வேண்டும் - ஆகியவை நம் அரசின் முக்கியமான நோக்கங்கள். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பரவலான திட்டங்கள் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறிய மற்றும் பெரிய பாசனத் திட்டங்களை அடுத்த ஐந்தாண்டுகளில் நிறைவேற்ற 168 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை நம்முடைய அரசு தீட்டியிருக்கிறது. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடியும்போது இவைகளின் மூலம் 2 இலட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதியை பெறும்.

பொதுவாக, தமிழ்நாட்டில் உள்ள விளை நிலங்கள் ஆற்றுப் பாசனம், ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம் என்ற மூவகையில் பாசனவசதிகளைப்பெறுகின்றன. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 95 சதவிகித நீர் வளத்தைப் பயன்படுத்தி வருகிறோம். எஞ்சியுள்ள நீர் வளத்தையும், பயன்படுத்தி, தற்போது பாசனம் பெறும் நிலங்களுக்கு மேலும் உறுதியான பாசன வசதி அளிக்கும் வகையிலும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

1. பாசன அமைப்புகளின் தலைப் பகுதியைச் சீரமைப்பதன் மூலம் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல் 2. வாய்க்கால்களில் தூர் எடுத்தல், கரைகளை உயர்த்துதல், நீர்க் கசிவுள்ள பகுதிகளைப் பூசுதல் ஆகியவை மூலம் நீர் வீணாவதைத் தவிர்த்து வேண்டிய அளவு நீரைக் கடைமடை வரையில் சமமாகப் பங்கீடு செய்ய இயலும். 3. வாய்க்கால்களில் தேவையான பகுதிகளின் தரத்தை உயர்த்துதல். 4. வெள்ளக் காலங்களில், வெள்ள நீரால் பாதிக்கப்படும் நிலங்களிலிருந்து நீர் விரைவாக வடியும் பொருட்டு, வடிகால்களைச் சீரமைத்தல் மற்றும் வெள்ள வடிகால் போக்குகளை நேராக அமைத்தல். 5. பண்ணைப் பகுதியில் மேம்பாட்டு வேலைகள் (On Farm Works).

இம்முறைகளால் நீர் சிக்கனப் படுத்தப்பட்டு அதிக பரப்பினை விவசாயத்திற்குக் கொண்டு வர இயலும்.

தற்போது ஆறுகளின் தள மட்டம் மற்றும் கரைகள் பாதிக்கப் பட்டுள்ளதால் தேவையான அளவு நீரை எல்லாக் காலங்களிலும் அனுப்ப இயலவில்லை. நீர்ப் பற்றாக்குறை உள்ள காலத்தில் விவசாயிகள் ஆங்காங்கே மண் அணைகளை அமைத்து நீரைப் பெற முயல்கிறார்கள். இவைகளைத் தவிர்க்கவும், எல்லாக் காலங்களிலும் பாசனத்திற்குத் தேவையான அளவு நீரைப்பாசன அமைப்புகளில் அனுப்பவும், மதகு அணைகள் கட்டுதல், மற்றும் பாசன ஆதாரங்களின் கரைகளை உயர்த்துதல், பலப்படுத்துதல் முதலிய வேலைகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் வெள்ளக் காலங்களில், வடிகால்களுக்கிடையே உள்ள படுகை அணைகளால், தடைபடும் தண்ணீரின் உயர்வால் நிலங்கள் மூழ்குவதைத் தவிர்க்கவும, நீரைச் சரியான முறையில் செலுத்துவதற்காகவும் படுகை அணைகளை மதகணைகளாக மாற்றி அமைக்க வேண்டியுள்ளன.

பாசன நீரைச் சிக்கனமாக உபயோகிக்கவும், கால்வாய் மற்றும் அதன் அமைப்புகளின் வழியாகப் பாயும் நீரைத் திட்டமிட்ட அளவுக்குக் கட்டுப்படுத்தவும், வாய்க்கால்களின் குறுக்கே பகுப்பு அணைகள், மட்டச்சுவர்கள் போன்ற அமைப்புகள் அவசியமாகின்றன.

சில வாய்க்கால்கள் அதிக தூரம் பாய்வதால் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்வதில் தாமதமேற்பட்டு அப்பகுதி பாசன வேலைகள் துவங்குவது தாமதப்படுகின்றது. மேலும் சில இடங்களில் தளம் மற்றும் கரைப் பகுதிகளின் மண்ணின் தன்மையால் நீர்க் கசிவு ஏற்படும். எனவே, கசிவு நீரின் அளவைப் பெருமளவு குறைக்கவும், நீரின் ஓட்டத்தைக் கூட்டவும் கால்வாய்களுக்குப் பூச்சு வேலைகள் தேவையாகின்றன.

இந்தக் காரணங்களைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள மிகப் பழைமையான பாசன அமைப்பான பெரியாறு வைகைப் பாசன முறையை நவீனப்படுத்தும் வேலை, உலக வங்கியின் உதவியுடன் ரூ. 41.04 கோடி மதிப்பீட்டில், தற்போது செயலாக்கப்பட்டு வருகின்றது. வைகைக் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டமும் இப்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இது தவிர மேலும் பல பழைய நீர்ப் பாசன முறைகளை நவீனப்படுத்துவதற்கு நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காவிரி பாசன முறையை நவீனப்படுத்தும் திட்டம் ரூ. 366 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தும் நோக்கத்துடன் அரசின் கவனத்தில் உள்ளது.

[48-ஆம் பக்கம் பார்க்க...]

வளரும் தமிழகம்

ஓரிரு தனி மனிதர்கள் அல்லது ஒருசில குடும்பங்கள்-ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து சில குடிசைகளை அல்லது வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழத் தொடங்கும் போது ஒரு கிராமம் உருவாகி விடுகிறது. அத் தனிமனிதர்களோடு அக்குடும்பங்களோடு பிற சிலரும் வந்து இணைந்து வாழத் தொடங்கும்போது . அக்கிராமம் விரிவடைகிறது. சிற்றூர்கள் பேரூராக. மாறும்போது-அதன் மக்கட் தொகை பெருக, தேவைகள் முளைக்கின்றன. தேவைகள் அதிகரிக்கும்போது - அவ்வூர்வாழ் மக்கள் அரசின் உதவியை எதிர்பார்க்கத் தொடங்கிவிடுகின்றனர்... இதுவே அன்றைய சமுதாய நலத்திட்டத்தின் பின்னணி.

ஆனால், இன்றைய நிலைமை மாறுபட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தோடு அவர்களின் தேவைகளும்விரைவாக வளர்ந்து கொண்டே சென்றுள்ளன. சில தேவைகளைத் தீர்ப்பதற்கு முன்பே வேறு புதிய தேவைகள் உருவாகிவிடுகின்றன. எனவே, தேவைகளற்ற தன்னிறைவு நிலையை உருவாக்கவே-உருவாக்கப்பட்டதுதான் தன்னிறைவுத் திட்டம். இது தனித்துவம் மிக்கதோர் திட்டம் என்றால் மிகையாகாது. அது எங்ஙனம் தனித்துவம் மிக்கது என்பதைக் கூறவே இக்கட்டுரை.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒன்பது பணிகள் நிறைவேற்றப் படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர். அந்த ஒன்பது பணிகளும் கிராம முன்னேற்றத்தில் எங்ஙனம் தன்னிறைவைத் தோற்றுவிக்கின்றன என்பதைத் தனித் தனியாகக் காண்போம்.

நீரின்றி அமையாது உலகு. எனவே, குடிநீருக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. குடிப்பதற்குச் சில குடங்கள் நீரைக் கொண்டு வருவதற்கு கிராம மக்கள் அல்லல்படக்கூடாது என்பதோடு, தூய்மையான குடிநீர் அவர்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் வழங்கப்பட தன்னிறைவுத் திட்டம் வழி வகுத்தது. எனவே இத்திட்ட. நிறைவேற்றத்தால் குடிநீர் தேவைகளைப் பொறுத்த வரையில் முதலில் நம் மக்கள் பெறுவது—தன்னிறைவு...

அடுத்ததாக, இணைப்புச் சாலைகள். இணைப்புச் சாலை அமைக்கும்பணி வழக்கமாக ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படும்பணி தானே..என்ற எண்ணம் எழலாம். ஏறத்தாழ பல மைல் பரப்பளவு கொண்ட ஒன்றியங்களில் சில இடங்களில் மட்டுமே வழக்கமான திட்டங்கள் வாயிலாக இணைப்புச்சாலைகள் ஆண்டுதோறும் இடப்பட்டன. ஆனால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. இதனால் உழைத்து விளைவித்த விளை பொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்லவும் மற்றும் நகரங்களுக்குச் செல்லவும் கிராமமக்கள் சாலை வசதி இன்றி இனியும் துயருற வேண்டியதில்லை.

அடுத்து, சிறுபாலங்கள். சிறு பாலங்கள் இல்லையெனில்



**எச். பி. என். ஷெட்டி,**

**ஐ. ஏ. எஸ்.**

**ஆணையாளர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**
**ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறை**


# தன்னிறைவுத் திட்டத்தின் தனித் தன்மைகள்





பெரும்தூரம் கொண்ட இணைப் புச் சாலைகள் அமைப்பதில் பய னில்லை, மக்களும் பயனடைய வாய்ப்பில்லை. ஏனெனின் பல கிராமங்களின் இணைப்புச்சாலை களில் ஆங்காங்கே குறுக்கிடும் சில நீரோடைகள், மற்றும் மழைநீர் வடிகால்கள், மழைக் காலங் களில் இணைப்புச் சாலைகளைத் துண்டித்து கிராமங்களைத் தனித் தீவுகளாக்கி விடுகின்றன. எனவே, சிறுபாலங்கள் அமைப்பு பணி யும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோடை காலங்களில் மட்டுமின்றி மழைக் காலங்களிலும் இணைப் புச் சாலைகளைப் பயன்படுத்தப் படும் வகையில் அவை அமைக்கப் படுவது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

ஆதிதிராவிடர் குடியிருப்பு களுக்கான மயான சாலை வசதி. நல்ல சாலை வசதி இன் மையால், இறந்தவர் உடலைச் சுமந்து செல்வதற்குப் பாதை இன்றி, பிணத்தைத் தோளில் கிடத்தி எடுத்துச் செல்ல வேண் டிய அவல நிலைகளைக்கொண்ட ஆதிதிராவிடர் குடியிருப்புக் களுக்கு மயான சாலை வசதி அமைக்கப்பட்டு வருவது-மேற் கூறிய அவல நிலைக்கு நிரந்தர மாக முற்றுப் புள்ளி இடும்.


கண்ணுடையோர் என்போர் கற்றோர். எனவே, கிராமவாழ் மக்களின் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் பொறுப்பு அரசின் தலையாயக் கடமை. கற்பதற்கு அறிவு மட்டுமின்றி நல்ல சூழ் நிலையும் தேவை. ஓலைக் கூரை அடியிலும் சிதிலமான சூழ்நிலை யிலும் இடிந்து விழும் நிலையி லிருக்கும் பழைய பள்ளிக் கட்ட டங்களிலும் கல்விபயிலும் வேண் டிய கட்டாயத்தை அகற்ற பள் ளிக் கட்டடங்கள் கட்டும் பணி இத்திட்டத்தில் எடுத்துக்கொள் ளப்பட்டது.

அடுத்து, சிறு பாசனத் திட்டம். வேளாண்மை நீர்ப்பாசனத்திற் குப் பெரிய அணைக்கட்டுகளை யும், பெருக்கெடுத்து ஓடும் ஆறு களையும் நம்பி வாழும் நிலை மையில் நமது அனைத்து மாவட் டங்களும் அமைந்திருக்கவில்லை. எனவே, சிறு குளங்கள் மற்றும் பாசன அமைப்புகளை நன்கு பராமரிக்க வேண்டியது அவசிய மாயுள்ளது. ஊராட்சி ஒன்றியங் களின் பராமரிப்பிலுள்ள நூறு ஏக்கர் பரப்பளவிற்கு மிகாத நிலங்களுக்கு நீர்ப்பாசனம் நல் கும் அனைத்து நீர்நிலைகளும், இத்திட்டத்தின் மூலம் செப்ப னிடப்பட்டு, பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்படும். எனவே, சிறு குளங்களால் பயன்பெறாமல், வானம் பார்த்த பூமியாக' உள்ள நிலங்களும் நிரந்தரமாகப் பயன் பெறுவதோடு அந்நிலங்களுக்குச் உரிமைபூண்ட பெரும்பாலான சிறு விவசாயிகள் தம் வாழ்வில் மேம்பாடடைவர் என்பது உறுதி.

நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம். எனவே, கிராம மக்கள் நோயற்ற வாழ்வு கொண்டு, நலமுற்று வாழ பிணி நீக்கம் மருந்தகங்களும் - தாய் சேய் நல விடுதிகளும் இத்திட் டத்தின் கீழ் கட்டப்படுகின்றன. ஏற்கனவே, வாடகைக் கட்டடங் களில் இயங்கி வந்த மருந்தகங் கள் தாய்சேய் நல விடுதிகள் இனி சொந்தக் கட்டடங்களுக்கு மாற் றப்படும்.

எண்ணற்ற ஆதிதிராவிடர் குடும்பங்கள் குடிசைகளில் வாழ் கின்றனர். எனவே, அவர்களுக்கு வீட்டு வசதி நல்க இத்திட்டம் வழி வகுக்கிறது. மொத்தத்தில்..

இத்திட்டம் தமிழகம் முழுவ தும் நிறைவேற்றப்பட்டு முடியும் போது, தமிழகத்தின் அனைத்துக் கிராமங்களும் அடிப்படை வசதி கள் அனைத்தையும் பெற்று, தன் னிகரற்று திகழ்ந்து பிற மாநிலங் களுக்கும் வழிகாட்டியாய் அமை யும் என்பது உறுதி!



## பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை

சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக தமிழ்நாடு அரசு ஓர் அறக்கட்டளையை ரூபாய் 25,000 முதலீடு செய்து ஏற்படுத்தி உள்ளது. 'பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை' என்னும் பெயரில் ஏற்படுத்தியுள்ள இந்த அறக்கட்டளை மூலம் இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய ஆய்வு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும். இதன்படி இவ்வாண்டு முதன்முதலாக பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய ஆய்வுச் சொற்பொழிவுகளை சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏப்ரல் 20, 21, 22 ஆகிய நாட்களில் முறையே 'தமிழ்க் கவிஞர்', 'புரட்சிக் கவிஞர்', 'உலகக் கவிஞர்' என்ற தலைப்புகளில் திருமிகு சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.



# புதுமனை புகும் ஆதி திராவிட மக்கள்

பெ. கந்தசாமி, ஐ.ஏ.எஸ்., ஆணையாளர், அரசுச் செயலாளர்
வீட்டுவசதி, நகர வளர்ச்சித் துறை.

கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் குடியிருக்க சொந்த வீடின்றி கொட்டில்களிலும், இருண்ட சுகாதாரமற்ற சிறு சிறு குடிசைகளிலும் வாழ்ந்து வரும் நிலையினைப் போக்கிட, தமிழ்நாடு அரசு 1976 ஏப்ரல் திங்களில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைத் துவக்க ஆணை பிறப்பித்தது. வட்ட அளவில் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களை ஆரம்பிப்பதென துவக்கத்தில் முடிவெடுத்த போதிலும், இத்திட்டத்தின் முழுப்பயனை அனைத்துக் கிராமப்புற மக்களும் அடையும் வண்ணம், கோட்ட அளவில் கிராமக் கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்தினை விரிவாக்கி, 1977-ஆம் ஆண்டில் அரசு ஆணை பிறப்பித்தது.

வாழ்க்கையின் அடித்தளத்திலுள்ள அனைத்து ஏழை எளியவர்களுக்கும் இத்திட்டத்தின் பயன் பெருவாரியான அளவில் கிடைக்கும் வண்ணம், 201 ச.அ. பரப்பில் ஒரே மாதிரியான வடிவமைப்போடு வீடு ஒன்று, ரூபாய் 3,750 மதிப்பீட்டில் கட்டுவதற்கு தற்போது கிராமக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்பட்டு இத்திட்டம் செயலாற்றப்பட்டு வருகிறது. இத்தகைய வீடு கட்டுவதில், வீடு கட்டும் அங்கத்தினர், வீட்டின் மதிப்பில் 20 விழுக்காடு, அதாவது ரூபாய் 750, பணமாகவோ உழைப்பாகவோ அல்லது வீடு கட்டப் பயன்படும் பொருளாகவோ செலுத்தி, பங்கேற்க வேண்டும். மேற்படி திட்டத்தின் கீழ் ஆதி திராவிட மக்களுக்கும், ஆதி திராவிடர் குடியிருப்பில் வீடு கட்டி குடியிருக்க முன்வரும் ஆதி திராவிடர் அல்லாத இதரர்களுக்கும் தற்போது இந்தக் கடன் தொகையில் ரூபாய் 1,000 மானியமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, எஞ்சிய கடன் தொகை ரூபாய் 2,000-ஐ மாதத் தவணையில் சுமார் ரூ. 8- என்ற வீதத்தில் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் மற்றுமொரு முக்கிய அம்சம் என்னவெனில், ஆதிதிராவிட மக்களுக்கு அளிக்கப்படும் கடனுக்கு வட்டி வசூலிக்கப்படுவதில்லை. வட்டி முழுவதையும் அரசே ஏற்கிறது என்பதாகும். மேலும், கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்த அங்கத்தினர்களில் 25 விழுக்காடு ஆதி திராவிட மக்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பின்தங்கிய மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், வேலை வாய்ப்புத்திட்டங்களை உருவாக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில், 'தன்னிறைவுத் திட்டம்' ( Self sufficiency scheme ) என்னும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மக்களுடைய முக்கிய தேவைகளை அறிந்து, அதற்கான சிறப்புத் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு செயலாற்றப்படும் திட்டங்களில் ஒன்று ஆதிதிராவிட மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வட்டியில்லாக் கடன் உதவி அளித்து வீடுகள் கட்டிக்கொள்ள ஏற்பாடுகள் செய்தலாகும்.

1980-1981-ஆம் ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் செயலாற்றப்பட்டு வரும் தன்னிறைவுத் திட்டத்தில் கிராமப்புற வீட்டு வசதி திட்டமும் அடங்கியதாகும். மேற்படி ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 69 ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 2.39 கோடி மதிப்பில் 7966 வீடுகள் கிராம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் கட்டி முடிப்பதென திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுள், 6240 வீடுகள் ஆதி திராவிட மக்களுக்காகவும், 1,726 வீடுகள் இதரர்களுக்காகவும் கட்டுவதென திட்டமிடப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தில் 1981 ஜனவரி திங்கள் 31ஆம் தேதிவரை, ஆதிதிராவிட மக்கள் 3,998 வீடுகளும், இதரர்கள் 1,042 வீடுகளும் கட்டி முடித்திருக்கிறார்கள். இவற்றின் மதிப்பு ரூபாய் 148.47 இலட்சமாகும். ஆதிதிராவிட மக்களால் கட்டப்படும் 4,039 வீடுகளும் இதரர்களால் கட்டப்படும் 936 வீடுகளும் கட்டுமானத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. இவ்வாறு கட்டுமானத்தில் உள்ள வீடுகளின் மதிப்பு ரூபாய் 75.03 இலட்சமாகும்.

தன்னிறைவுத் திட்டம் 1981-1982-ஆம் ஆண்டில் மேலும் 150 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு செயலாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. வாழ்க்கையில் அடித்தளத்தில் உள்ள நலிவுற்ற ஏழை எளிய மக்களாகிய ஆதிதிராவிடர்கள், வீடுகள் கட்டிக்கொள்ள வசதிகள் செய்து கொடுப்பதன் மூலம் ஈடுஇணையற்ற தொண்டினை இவ்வரசு ஆற்றி வருகின்றது.



# குடிநீரில் தன்னிறைவு

**வே. கருப்பன்,** இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,

பாரதத் திருநாடு சுதந்திரம் பெற்று மக்களாட்சித் தத்துவத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்தின் அடிப்படையில், பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவை பல நிலைகளிலே நிறைவேற்றப்பட்டிருந்தும் கூட, கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளாகிய குடிநீர் வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, சாலை வசதி, மின் வசதி போன்ற வசதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. கிராமங்களில் குடிநீர் வசதியற்ற நிலையும், போக்குவரத்துச் சாலை இல்லாத நிலையும், மருத்துவவசதி, கல்விவசதி நல்ல முறையில் இல்லாத நிலையும் குடிசை வாழ்வோர் மின் வசதி பெறாத நிலையும் இருந்து வருகிறது. இந்நிலையைக் கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கிராம மக்களின் நிலையை உயர்த்திடும் வகையில், 'தன்னிறைவுத் திட்டம்' என்ற புதிய திட்டத்தினை உருவாக்கித் தந்துள்ளார்கள்.

இம்மகத்தான திட்டத்தின் படி, எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, சாலை வசதி, கல்வி வசதி, முழுமையான மருத்துவ வசதி, ஆதி திராவிட மக்கள் இடுகாட்டிற்குச் செல்லப் பாதை வசதி போன்றவற்றைக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடித்துவிட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக 1980-81ல் 69 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு, மேற்குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன. மக்களுக்கு மிக மிகத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு திட்டப்பணிகள் விரைவு படுத்தப்பட்டுள்ளன. 69 ஒன்றியங்களிலுள்ள 2208 குடியிருப்புகளில் ரூ. 15 கோடி செலவில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதன் மூலம் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்று அரசு முழுமையாக நம்புகிறது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது என்பது மக்களின் அடிப்படைத் தேவை நிறைவு செய்யப்படுகிறது என்பதோடு மட்டுமல்லாமல், பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் வேலை வாய்ப்புத் தோன்றிடவும் ஏதுவாகிறது.

தண்ணீரின் மூலம் பரவக் கூடிய டைபாய்டு, மலேரியா, வயிற்றுப் போக்கு, காலரா போன்ற கொடுமையான நோயகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடிகிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதால், இது போன்ற பிணிகள் அறவே குறைவதன் காரணமாக இறப்பு எண்ணிக்கை குறைவதோடு, ஆயுட்காலமும் நீடிக்கிறது. மக்களின் மருத்துவச் செலவும், அரசுக்குக் குறைகிறது. குடிநீர் வசதி தருவதன் மூலம் தொழில் வளர்ச்சி, நிதிவசதி, வணிகவசதி வளர்கிறது. மனை இடங்களின் மதிப்பும், வீடுகளின் விலை மதிப்பீடும் உயருகிறது. இல்லத்திற்குத் தேவையான நீரைச் சேமிப்பதற்காக நெடுந் தொலைவு அலைந்து கொண்டிருந்த தாய்மார்களின் நீண்ட நாள் துயர் துடைக்கப்படுகிறது. வீட்டுக்கு அருகிலேயே நீர் வழங்கப்படுவதன்மூலம் நீர் கொணர்வதற்காக எடுத்துக் கொள்ளும் நேரமும், வேலைப் பளுவும் குறைவதால், எஞ்சுகின்ற நேரத்தையும், சக்தியையும் பயனுள்ள வழியில் செலவழிக்க இயலும்.

கிராமங்களில் இருக்கின்ற மக்கள் போதுமான அளவு வேலை வாய்ப்பும் வேலைக்குத் தகுந்த வருவாயும் கிடைக்காததால் நகரங்களுக்குச் சென்று நகரங்களில் இருக்கின்ற வசதியைக் குறைப்பதோடு அருவெறுப்பும், ஆபத்தும்

தரக்கூடிய நிலையில் நகரங்களிலே வாழ்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. நகரங்களில் கிடைக்கின்ற வசதிகளான, நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கல்வி வசதி போன்ற இன்ன பிற வசதிகளும் கிராமங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுவதன் வாயிலாக கிராம மக்கள் நகரங்களுக்குச் செல்லும் அவல நிலை மாற ஏதுவாகிறது.

ஆக, மேற்கூறிய குறிக்கோள்களை எய்துகின்ற வகையில், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தமிழகத்தில் 100க்கும் மேற்பட்ட மக்கள் தொகையினைக் கொண்ட குடியிருப்புகளாக 47,705 குடியிருப்புகள் கணக்கிடப்பட்டுள்ளன. இதில், 69 ன்னிறைவு ஊராட்சி ஒன்றியங்களில் 2208 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் திட்டங்கள் விரைவு படுத்தப்பட்டுள்ளன. இதுதவிர ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் நீர் ஆதாரம் இல்லாதவைகளும், நீர் ஆதாரம் இருந்தும் குடிப்பதற்கு ஏற்ற நிலையிலும் இல்லாத தமிழகத்தில் மொத்தமுள்ள 5474 குடியிருப்புகளுக்கு ரூ. 25.76 கோடி செலவில் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரையில் 4401 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 1073 குடியிருப்புகளிலும் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன.

இந்தத்திட்டத்தினை நிறைவேற்றுகின்றபொழுது சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக வாகைக்குளம், சாயர்புரம் போன்ற பகுதிகளிலே நல்ல நிலத்தடி நீர் தேவையான அளவு இருந்தும், தேவைப்பட்ட பகுதிகளுக்கு அவற்றை எடுத்துச்செல்வதை, அங்குள்ள மக்கள் தவறான அச்சத்தின் காரணமாக நியாயமற்ற முறையில் எதிர்க்கிறார்கள். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பழந்தமிழ் சொல்லுக்கு இலக்கணமான மக்கள், நீரற்ற தங்களுடைய சகோதர மக்களுக்குக் குடிநீர் எடுத்துச் செல்வதைத் தடுப்பது விந்தையிலும் விந்தையல்லவா? அவர்களுடைய நல்லெண்ணத்தை எதிர்நோக்கி அவர்களுடைய தேவையற்ற ஐயப்பாடுகளைக் களைந்து முழு ஒத்துழைப்போடு நிலத்தடி நீரை மற்ற குடியிருப்புகளுக்கு எடுத்துச் செல்ல ஆவன மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தவிர, இவ்வாண்டு தோன்றியுள்ள கடுமையான வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிடும் வகையில், அரசின் ஆணைகேற்ப சுமார் 470 இலட்சம் ரூபாய் செலவில் 2500 ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கும் பணியில், வாரியம் போர்க்காலத் தீவிரத்தோடு தன்னை முழுமையாக சடுபடுத்திக்கொண்டுள்ளது.

மேலும் நடப்பு நிதி ஆண்டில் (1981-82ல்) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள 150 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 4076 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட விருக்கின்றன. 3.3.82க்குள் இக்குடியிருப்புக்களிலுள்ள மக்கள் அனைவர்க்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் முழுமையாக வழங்கிட வாரியம் சூளுரை எடுத்துக் கொண்டு மிக முனைப்போடு பணியாற்றி வருகிறது.

## தஞ்சை அரண்மனையில் மராட்டிய இருட்டறை கண்டுபிடிப்பு

அண்மையில் தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்கள், தஞ்சை அரண்மனைக்கு வருகை தந்து அதன் கட்டட நுணுக்கத்தையும், ஓவியங்களையும் கண்டு களித்தார்கள். அவ்வமயம், இவ்வரண்மனையின் பல பகுதிகளில் சுரங்கப் பாதைகள் இருக்கக் கூடும் என்பதையும், பாதாள இருட்டறைகள் இருந்தால் அவற்றையும் கண்டுபிடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு ஆணையிட்டார்கள். அதன்படி அரண்மனையின் பல பகுதிகளையும் மாநிலத் தொல்பொருளாய்வுத்துறை ஆய்ந்து வருகிறது.

இப்பொழுது மராட்டிய இளவரசர் குடும்பம் வாழும் பகுதிக்குக் கீழ் ஒரு பெரிய இருட்டறைப் பகுதி காணப்பட்டுள்ளது. இதில் சுமார் 15 அறைகளுக்கு மேல் உள்ளன. பல அறைகளில் வண்ண ஓவியங்களும், சுதை உருவங்களும் உள்ளன. சுமார் 18-ஆம் நூற்றாண்டில் மராட்டிய மன்னர்களால் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களாகும், இவை. சுதை உருவங்களில் பல குறிப்பிடத்தக்க தெய்வ உருவச் சிலைகள் உள்ளன. ஐந்து தலைகளுடன் கூடிய கபிலர் என்னும் மகாவிஷ்ணுவின் சிலை, ஐந்து முக ஆஞ்சனேயர், பஞ்சமுக கருடன், பஞ்சமுக ஹேரம்ப கணபதி, விஸ்வரூப இராமர், துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகியோர் . சிற்பங்கள் இவ்வாறு நின்ற நிலையில் உள்ளன. ஓவியங்களில் ஆஞ்சநேயர், உமா மகேஸ்வரர், கஜலட்சுமி ஆகிய உருவங்கள் உள்ளன. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தஞ்சை அரண்மனையை மேலும் ஆய்ந்து வருகிறது.

# தன்னிறைவுத்திட்ட முதற் கட்டம்!

க. ச: லோகவிநாயகம்
தலைமைப்பொறியாளர்
நெடுஞ்சாலை—கிராமப் பணிகள்

இதுவரை மாநிலம் முழுவதும் தழுவிய திட்டத்திற்குட்பட்டே கிராமங்களில் பணிகள் செயலாக்கப்பட்டு வந்தன. இம்முறையில் திட்டத்தினால் ஏற்படும் விளைவுகளைப் பொறுத்து மட்டுமே, கிராமங்களுக்கும் குறிப்பாக அவற்றில் உள்ள ஏழை மக்களுக்கும் ஓரளவு பயன் கிட்டியது. இதனால் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைக் கூட முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலை இருந்து வந்தது. இம்முறையை மாற்றி அமைத்து, மக்களின் அடிப்படை வசதிகள் குறுகிய காலத்தில் நிறைவு பெற வேண்டும் என்கிற கொள்கையை அடிப்படையாக வைத்து, தமிழக முதல்வர் தீட்டிய திட்டத்தின் முழுவடிவம்தான் தன்னிறைவுத் திட்டம். இத்திட்டம் தமிழக அரசின் மிகப் பெரும் சிறப்புத் திட்டமாகும்.

கிராம மக்களின் குறைந்த பட்சத் தேவைகளையும் அவர்களுக்குத்தேவையானஅடிப்படை வசதிகளையும் உடனடியாக, மிகக் குறைந்த காலத்தில் முழுமையாக அமைத்துத் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நாடு விடுதலை அடைந்து 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் கிராமமக்களுக்குஇன்னும்கிட்டாத இணைப்புச் சாலைகள், மயானங்களுக்குக்கூட இதுவரை அமைக்கப்படாதிருந்த பாதைகளை அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சிறிய நீர்ப்பாசன நிலைகளை மேம்பாடு செய்தல், தாய் சேய் நல விடுதி கட்டடங்கள் மற்றும் ஊரக மருந்தகங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல் ஆகியவை முழுமையாகவும் விரைவாகவும் கிடைக்க வகை செய்யும் நோக்குடன் தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்தைச் செயலாக்க முன் வந்துள்ளது.

சில ஆண்டுகளுக்குள்ளாகவே இவ்வசதிகள் அனைத்தும் கிராம மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் வரையப்பட்டுள்ள இத்திட்டம், மூன்று கட்டங்களில் செயலாக்கப்படும்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராம மக்களும் இவ்வசதிகளைப் பெற்று, தமிழ்நாடெங்கும் புத்துணர்வும் மறுமலர்ச்சியும் பெறுவர்.

இம்மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டத்தை முதல் கட்டத்தில் 69 ஊராட்சி ஒன்றியங்களிலும், இரண்டாவது கட்டத்தில் 150 ஊராட்சி ஒன்றியங்களிலும், மூன்றாவது கட்டத்தில் எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்துவது அரசின் நோக்கமாகும்.

நம்மாநிலத்தில் முதல் கட்டமாக 1980-82ஆம் ஆண்டு 15 மாவட்டங்களில் உள்ள 69 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## இணைப்புச் சாலைகள்:

விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ள நமது மாநிலத்திற்கு சாலைப் போக்குவரத்து மிக இன்றியமையாததாகும். சிறிய பெரிய விவசாயிகள் தங்களது விளை பொருட்களை அருகிலுள்ள சந்தைக்குக் கொண்டு செல்லவும், மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்லவும் இணைப்புச் சாலை முக்கியமான ஒன்றாகும். மேலும் கிராமப்புற மக்கள் நோய்வுற்றகாலங்களில் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குச் செல்லவும், தாய்க்குலம் பிரசவக் காலங்களில் விரைவில், எளிதாக தாய்சேய் நல விடுதிக்குச் செல்லவும், கிராம மக்கள் விரைவில் பேருந்துகள் நிலையத்துக்குச் செல்லவும், கிராமங்களைஅருகிலுள்ள முக்கியநெடுஞ்சாலைகளுடன் இணைக்கவும் தன்னிறைவுத் திட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 250-க்கு மேல் 1500-க்குள் உள்ள மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்குப் பயன்படும் வகையில் இந்த ஆண்டு மொத்தம் 69 ஊராட்சி ஒன்றியங்களின் மூலம், 5788.00 கி.மீ. சாலை வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்காக 679.5825 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

## மயானங்களுக்குப் பாதை அமைத்தல்:

ஏற்கெனவே அரிசனங்களுக்கு முன்னோடியாக அவர்களில் மரணமடைந்தவர்களின் குடும்பத்திற்கு இறந்தவரின் இறுதிச் சடங்கை நிறைவேற்ற ரூபாய் 50 வழங்கப்பட்டு வருகிறது. அதோடு நிற்காமல் அரிசன மக்களின் மயானங்களுக்கு இறந்தவரின் உடலை எவ்வித இடையூறும் இல்லாமல் கொண்டு செல்வதற்காகப் பாதைகள் அமைக்க தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 1980-81ல் 856.20 கி. மீட்டர் நீள பாதை வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கு 53.410 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

## சிறு பாலங்கள்:

இணைப்புச் சாலைகளுக்காகத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தனியாக நிதி ஒதுக்கப்பட்டதோடல்லாமல், சாலைகள் எல்லாப் பருவ காலங்களிலும் பயன்படும் வகையில் சாலைகளில் குறுக்கிடும் ஓடைகள் வாய்க்கால்கள் முதலியவற்றிற்குச் சிறுபாலங்கள் கட்டவும், பழுதடைந்த சிறு பாலங்களைப் புதுப்பிக்கவும் நிதி ஒதுக்கப்பட்டு 69 ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் மொத்தம்



2615 சிறு பாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு 171.4215 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள்:**

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.''

என செப்பிச் சென்ற பாரதியின் கனவு நனவாக, கிராமங்களில் எல்லாம் பள்ளிகள் தமிழகம் முழுவதும் நிறுவப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக வேலைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் சொந்தமான கட்டடங்கள் இல்லாத ஆரம்பப்பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டடமும், படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்தும் இன்னமும் நிறைய பள்ளிகள் சொந்தக் கட்டடம் இல்லாத நிலையில் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகிறது. இந்த நிலையைப் போக்கி கிராம மக்களுக்கு நல்ல முறையில் கல்வி கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்களில் 770 புதிய பள்ளிக்கட்டடங்களும் கூடுதல் பள்ளிக் கட்டடங்களும் கட்ட 290 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 1980-81ஆம் ஆண்டில் 162 புதிய கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 246.191 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் மேலும் மொத்தம் 2000 பள்ளிக் கட்டடங்கள் கட்ட 582 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

**பாசனச் சிறு திட்டங்கள்:**

''நீர் உயர நெல் உயரும்'' என்ற அவ்வையின் அமுத வாக்கிற்கிணங்க, நீரைத் தேக்கி வளத்தை உயர்த்திட சிறு பாசன குளங்கள், கண்மாய்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் சீரமைப்புப் பணிகள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பல பெரும் நீர்த்தேக்கங்கள் அரசினால் கட்டப்பட்டிருப்பினும் அவைகளின் நீர்ப்பிடிப்பிற்குள் வராத பல கிராமங்களில் இருக்கும் பல சிறு நீர்ப்பாசன நிலைகள் நல்ல நிலையில் இல்லாததகாரணத்தால், மழைக்காலங்களில் தண்ணீரைத் தேக்கிவைத்து பாசனத்திற்குப்பயன்படுத்த முடியாது உள்ளது. இந்நிலையை மாற்றி எல்லா நீர்ப்பாசன சிறிய நிலைகளையும் ஆழப்படுத்தியும் ரிவெட்மென்ட்டுகள் கட்டியும், மதகுகளைச்செப்பனிட்டும் மழை காலங்களில் தண்ணீரைத் தேக்கி வைப்பதன் மூலம் பாசன வசதியைப் பெருக்குவதுடன் அருகாமையிலுள்ள கிணறுகளிலும் நீர் மட்டத்தைச் சமன் செய்யவும் 1980-81ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 69 ஊராட்சி ஒன்றியங்களிலும் 765 வேலைகள் எடுக்கப்பட்டு 39.348 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளன.


**தாய் சேய் நல விடுதி:**

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''. இது முதுமொழி, கிராம மக்கள் நோயற்ற வாழ்வு வாழ கிராமிய மருந்தகங்கள் மற்றும் தாய் சேய் நல நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆயினும் பல நிலையங்களுக்குக் கட்டடம் இல்லாத நிலை உள்ளது.

பல கிராமங்களில் நல்ல முறையில் மகப்பேறு நிலையங்கள் இல்லாது ஆங்காங்கு ஆயாக்களே மகப்பேறு மருத்துவம் செய்து வந்தனர். இந்நிலையை மாற்றி கிராம மக்களுக்கும் நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்களின் வசதி கிடைக்க செய்யும் பொருட்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81-ம் ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களிலும் 234 தாய்சேய் நல விடுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ. 71.249 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக மருந்தகங்கள்**

பல கிராமங்களில் கிராம மக்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதி கிட்டாமல், நோயுற்ற காலங்களில் தொலை தூரம் சென்று மருத்துவ உதவி பெற்று வந்த நிலையை மாற்றியமைக்க திட்டமிட்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81ஆம் ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களில் 79 ஊரக மருந்தகக் கட்டடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்



காக 30.517 இலட்சம் ரூபாய செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டம் தவிர குறைந்த பட்ச தேவை திட்டத்தின் கீழும் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. 1972-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஊரக சாலைத் திட்டம் செயல்பட்டு வருகிறது. 1500க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களை இணைக்கும் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. 1980-81ஆம் ஆண்டு மேற்படி திட்டம் முழுமையும் தன்னிறைவுத் திட்டத்திற்கே பயனுறும் வகையில் திட்டம் மேற்கொண்டு செயல்படுத்தப்பட்டது. இதன்படி 424 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு, தார் சாலைகளாக மாற்றியமைக்கும் பணி செயலாக்கப்படுகிறது.


இதைத் தவிர, பேருந்துகள் செல்லும் ஊராட்சி சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச்சாலைகள் மேம்பாடு செய்யும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1960-61ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1973-74ஆம் ஆண்டு முடிய சுமார் 12,500 கி.மீ. ஊராட்சி சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேற்படி திட்டத்தில் மேம்பாடு செய்யப்பட்டு அரசு சாலைகளாக நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையால் பராமரிப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நிதி நிலை பற்றாக்குறை காரணமாக 1974-ஆம் ஆண்டு முதல் 1979ஆம் ஆண்டு முடிய மேற்படி திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் மேற்படி திட்டம் 1979-80ஆம் ஆண்டு செயல்படத் துவங்கி பன்மடங்கு வேகத்தில் செயல்பட்டு ரூ.600 இலட்சம் செலவில் 2510 கிலோ மீட்டர் நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு பராமரிப்புக்காக அரசு சாலைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. 1980-81-ம் ஆண்டிலும் 10கோடி ரூபாய் செலவில் மேலும் 3146 கி.மீ. நீள ஊராட்சிச் சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்ய அங்கீகரிக்கப்பட்டு அதில் 2000 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் 1980-81-ஆம் ஆண்டிலேயே மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

1981-82ஆம்ஆண்டு மீதமுள்ள 1146 கிலோ மீட்டர் நீளச்சாலைகள் 13 கோடி ரூபாய் செலவில் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1.4.1978 முதல் 31.3.1980 முடிய அபிவிருத்தி செய்யப்பட்ட 2257 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பேருந்துகள் செல்லும் சாலைகளும் 11.28 கோடி செலவில் மேம்பாடு செய்ய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது தன்னிறைவுத் திட்டம் செயல்படும் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் பேருந்துகள் செல்லும் சாலைகளுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. 1979-80-ல் இருந்து 1981-82 முடிய மேற்படி திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப்படும் சாலையின் தொகுப்பு கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | பேருந்து செல்லும் சாலைகளின் நீளம் கி.மீ. | தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் வரும் சாலையின் நீளம்-கி.மீ. | (ஊராட்சி ஒன்றியங்கள்) |
|---|---|---|---|
| 1979—80 | 2,510 | 887 | (69 .. ) |
| 1980—81 | 3,146 | 550 | (69 .. ) |
| 1981—82 | 2,257* | 705 | (100 ... ) |

* அரசின் அங்கீகாரம் எதிர் பார்க்கப்படுகிறது.



மேற்படி திட்டங்களினால் முதல் கட்ட தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 49,74,639 மக்கள் பயனடைவர்.

| | | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தன்னிறைவுத் திட்டத்தை செயல் படுத்த | 1,644 |
| 2. | பேருந்து செல்லும் சாலைத் திட்டத் தொகை | 1,000 |
| 3. | குறைந்த பட்ச தொகைத்திட்டம் | 600 |
| | மொத்தம் ஒதுக்கப்பட்ட தொகை | 3,244 |

# தாகம் தீர்க்கும் பணியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்


* 1980-81ல் தன்னிறைவு திட்டத்தின் கீழ் 2208 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிட ரூ 15 கோடியில் திட்டங்கள்!

* 1981-82ல் (நடப்பு நிதியாண்டில்) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 4407 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிட ரூ 47 கோடியில் திட்டங்கள்!

* வறட்சியால் வாடிடும் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்திட ரூ 430.12 இலட்சம் செலவில் 2380 ஆழ் துளைக் கிணறுகள்!

* 1981-82ல் நகரக்குடிநீர்த் திட்டங்களுக்கும் வடிகால் திட்டங்களுக்கும் ரூ 15 கோடி நிதி ஒதுக்கீடு!

மேற்காணும் பணிகளை விரைந்து முடித்திட வாரியம் மிகுந்த முனைப்போடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.



**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
31, காமராசர் சாலை, சேப்பாக்கம்,
சென்னை- 600 005.

'Ravi Arts' MS-17



### அரசியல் சட்ட மேதை

# அம்பேத்கார் பிறந்தநாள் விழா

அரசியல் சட்டமேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 91வது பிறந்தநாள் விழா தமிழ்நாடு அரசின் சார்பில் 1981 ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை சென்னை கலைவாணர் அரங்கத்தில் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டது.

மகிழ்வூட்டும் நாயன இசைக்குப் பிறகு மாலை 6 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கே. ஏ. சுந்தரம், இ. அ. ப., அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் விழாத்தலைமை ஏற்றார். அவர் தன்னுடைய தலைமையுரையில் வரலாற்றுச் சிறப்புடைய பல நிகழ்ச்சிகளைக் கோடிட்டுக் காட்டி, அரசியல் மேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கார் அவர்களது சீரிய கருத்துக்களை, அந்தத் தனிப் பெருந்தலைவரின் தன்மான இயக்கக் கொள்கைகளை உணர்ச்சிமிகு அழகுதமிழில் தெளிவுபட எடுத்துக் கூறினார். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சிறந்த அரசியல் மேதை; வடமொழியில் சிறந்த புலமை பெற்றவர்; தனக்கென ஒரு சகாப்தத்தையே உருவாக்கிய தனிப் பெருந்தலைவர் என்றும் குறிப்பிட்டார். அம்பேத்கார் அவர்களின் சுயமரியாதை இயக்கம்தான் தமிழ்நாட்டில் அவரை அறிமுகப்படுத்தியது என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''நானும், தந்தை பெரியார் அவர்களும் இரங்கூனில் 1952-ல் நடைபெற்ற புத்த மத மாநாட்டில் சந்தித்தோம். நான் அப்போது தந்தை பெரியார் அவர்களது அந்தரங்க செயலாளனாக இருந்தேன். அவருடன் உரையாடும் போதுதான் அவரது அறிவுத்திறன், நுண்மான் நுழைபுலம் புலப்பட்டது. டாக்டர் அம்பேத்காருக்குச் சமமாக இந்தியாவில் தந்தை பெரியாரைத் தவிர வேறு எவரையுமே கூறமுடியாது. தந்தை பெரியார் அவர்களின் 'குடியரசு ஏடு டாக்டர் அம்பேத்கார் அவர்களது கொள்கைகளை, இலட்சியங்களைப் பரப்புகின்றபணியைச் சீரிய முறையில்-அந்தக் காலத்திலேயே செய்து வந்தது.

டாக்டர் அம்பேத்கார் அவர்களது பிறந்த தின விழாவைக் கொண்டாடும் யோக்யதை இந்த அரசுக்குத்தான் உள்ளது என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். இந்தியாவில் முதன் முதலில் உயர்நீதிமன்றத்தில் ஒரு ஆதிதிராவிட குடிமகன் நீதிபதியாக நியமிக்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். தற்போது அவர் உச்சநீதிமன்றத்தில்நீதிபதியாகப் பணியாற்றுகிறார். இப்படி ஒரு எழுச்சிமிக்க நிகழ்ச்சி தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் நடைபெறவில்லை. டாக்டர் அம்பேத்கார் அவர்களின் கொள்கையை, தாழ்த்தப்பட்டோருக்கு அவர் ஆற்றிய பணிகளை நம்மால் மறந்துவிட முடியாது.''

**அரசு அலுவலகங்களில் டாக்டர் அம்பேத்கார் திருவுருவப்படம்!**

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தை தமிழ்நாடு அரசு அலுவலகங்களிலும், அரசுக் கட்டடங்களிலும் வைக்கலாம் என, தமிழக அரசு 24.10.80 நாளிட்ட அரசு ஆணை 2363ல், தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

தலைமையுரைக்குப் பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு ஜி. மூர்த்தி அவர்கள் உரையாற்றியபொழுது குறிப்பிட்டதாவது: ''இந்த நாட்டில் தோன்றி மறைந்த-வாழுகின்ற தலைவர்கள் அனைவருமே அண்ணல் அம்பேத்காரின் சிதறல்தான். தீண்டாமைக்கு மூலகருவியாக உள்ள சாதி ஒழிய வேண்மென வீர முழக்கமிட்ட வீரத் திருமகன் அம்பேத்கார் அவர்கள்!''

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எஸ். விஜயசாரதி அவர்கள் விழாத் தொடக்க உரையாற்றினார். ஆதித்திராவிட மக்களுக்கு அரசு ஆற்றியுள்ள பணிகளை எடுத்து விளக்கி, 'தீண்டாமை எனும் கொடிய நோயினை தமிழகத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும், எல்லா சமுதாயத்தினரும் ஒன்றுபட்டு பாடுபட்டு விரட்டியடித்து தமிழகத்திற்குப்பெருமை சேர்க்க வேண்டும்' என அவர் குறிப்பிட்டார்.

அதன்பிறகு பேசிய திரு வலம்புரிஜான் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது; டாக்டர் அம்பேத்கார் அவர்கள் காலத்தால் உருவாக்கப்பட்ட தலைவர் மட்டும் அல்ல; காலத்தையே உருவாக்கிய தலைவர். அரசியல் விடுதலையைவிட, சமுதாய விடுதலைதான் முக்கியமென்று முழக்கமிட்ட மாபெரும் வீரர்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதிசீனிவாசன் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். அவர் பேசும்போது, ''மேடையில் பேசுவது ஒன்றும் செயல்படுவதும் ஒன்றுமான நிலை இருந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. உண்மையை, நியாயமானதை, நல்லதை நினைக்க வேண்டும்-பேச வேண்டும். அது மட்டுமல்லாமல், செயலிலும் காட்டவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் மனிதர்களாக இருக்கப் பாடுபட்டவர் அம்பேத்கார் ஆவார். அவரது கொள்கைகள்-இலட்சியங்கள் வெற்றியடைய நாம் தொடர்ந்து பாடுபடவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

ஆதிதிராவிட நலத்துறை இயக்குநர் திரு பி.எல்.பொன்னுசாமி, இ.அ.ப. டாக்டர் அம்பேத்கார் அவர்களின் அறிவுரைகளை விளக்கி, உலகத்துப் பேரறிஞர்களின் வரிசையில் 6-வது இடத்தைப் பெற்றவர் அம்பேத்கார் என்று குறிப்பிட்டார். டாக்டர் அம்பேத்கார் அவர்களின் இலட்சியக் கொள்கைகள் மூன்று ஆகும். அவற்றை ஆங்கிலத்தில் சொல்வதானால் educate, agitate, organise என்பவனவாகும். எல்லா மக்களும் கல்வி அறிவு பெறவேண்டும். கல்வி அறிவு பெற்றால் தான் மனிதன் மனிதனாக இருக்க முடியும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. ஏன் தாழ்த்தப்பட்டவர்களாக உள்ளோம், ஏன் இந்த அவலநிலை என்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் சிந்திக்க வேண்டும். கிளர்ச்சி என்றால் பலாத்காரம் அல்ல. வன்முறையிலே அல்ல; சிந்தனையிலே கிளர்ச்சி வேண்டும், எழுச்சி வேண்டுமென முழங்கியவர் டாக்டர் அம்பேத்கார்.

கல்வியறிவு, சிந்தனை மட்டும் போதாது. இவை கட்டுக் கோப்பான அமைப்பு ரீதியாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென இலட்சியப்பாதை வகுத்துக் கொடுத்தவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்.

அடுத்து, தமிழ்நாடு திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு டி.கே. சீனிவாசன் அவர்கள் பேசுகையில், தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்னைஒரு கருணைப் பிரச்சினை அல்ல. அது ஒரு உரிமைப் பிரச்னை. எனவே, ஒரு நாட்டுப் பிரச்னையைப் போக்குவதற்காக அரும்பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஆவார். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒரு சமுதாயத்திற்காகப் போராடியவர் என்ற சிறு வட்டத்திற்குள் அடைத்துவிடாமல் நாட்டுப் பிரச்சினைக்காகப் போராடினார் என்பதை நாம் எடுத்துச் சொல்லியாகவேண்டும். தான் கொண்ட இலட்சியத்தைக் கடைசிவரை அவர் கைவிடவே இல்லை. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்குப் பதிலாக யான் பெற்ற துன்பம் மற்றவருக்கு வரக்கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருக்குறளார் வீ. முனுசாமி அவர்கள் நகைச்சுவை ததும்ப, பேசுகையில் கேட்போரை சிரிக்க சிரிக்க வைத்து அதே சமயத்தில் சிந்திக்க வைத்து அனைவரின் கவனத்தையும் கவர்ந்தார். அம்பேத்காருடன் நான் நேரில் பழகியவன். அவர் ஒரு மாபெரும் அறிவுலக மேதை. ஆங்கிலப் புலமை, வடமொழிப் புலமையும் ஒருங்கே அமையப்பெற்றவர். அரசியல் சட்டத்தை உருவாக்கியவர். அவருடன் பல தடவை உரையாடியிருக்கிறேன். சாதியை ஒழிக்க அம்பேத்கார் அவர்கள் பாடுபட்டார். அவர் மட்டும் பாடுபடவில்லை. தந்தை பெரியார் அவர்களும் பாடுபட்டார். ஆனால் இன்றுவரை சாதி பிரச்னையை நம்மால் ஒழிக்க முடியவில்லை. நம் சமுதாயத்திலே சாதிப் பிரச்சினை இருந்து கொண்டே வருகிறது. படித்த மக்கள் ஒவ்வொருவரும் சமுதாயம் முன்னேறுவதற்கான செயல்முறைகளைஉணர்ந்து











அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

''சாதி வித்தியாசத்தை வைத்துக் கொண்டு ஒரு நாடு எப்படி முன்னேற முடியும்? சாதி முறை இருக்கும் வரை இந்த நாடு முன்னேறவே முடியாது. யார் யாருடைய படத்தையோ வீட்டிலே மாட்டுகிறோம். டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டும். எல்லாக் கொடுமைகளையும் விட சாதிக் கொடுமை மிகக் கொடுமையாகும். சாதியானது அறிவைக் கொல்கிறது. டாக்டர் அம்பேத்கார் போன்ற மாபெரும் மேதைகளேயே சாதி என்ற கொடுமை ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடியாமல் செய்துவிட்டது. இந்த சாதி இருக்கின்ற வரை நாடு எப்படி முன்னேற முடியும்?''

அடுத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ''தாழ்த்தப்பட்ட மக்கள் சலுகை பெற வருமான வரம்பு ரூ. 3,000 என்பதிலிருந்து ரூ. 10,000என்று மாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

செய்தி,மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே முடிந்தது.

—நிகழ்ச்சி தொகுப்பு
**வ. சம்பந்தம்**



ஓசூரிலுள்ள தாலி சாலைத் திட்டத்தில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் திரு ஈ. எஸ். வெங்கடேசன், எம். எல். சி., அவர்களின் தலைமையில், ஒதுக்கீட்டுக் குழு 18-3-1981-ஆம் நாளன்று ஓசூரில் கூடி, வீடுகளை ஒதுக்கீடு செய்தது.

இத்திட்டமானது 11.19 ஏக்கர் நிலப்பரப்பில், 'ஹட்கோ'வின் நிதி உதவியைக் கொண்டு, ரூ. 43.0 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சி அடைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருவாயில் நலிந்த பிரிவினர்களுக்கு 6 வீடுகளும், குறைந்த வருமானம் உள்ள பிரிவினர்களுக்கு 93 வீடுகளும், நடுத்தர வருமானம் உள்ள பிரிவினர்களுக்கு 41 வீடுகளும், உயர் வருமானம் உள்ள பிரிவினர்களுக்கு 6 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. மேலும் உயர் வருமானம் உள்ளவர்களுக்காக 8 மனைகளும் இத்திட்டப்பகுதியில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு. ஓசூரில் கட்டப்படும் வீடுகளில் 50 சதவீதத்தை சிறு தொழில் வளர்ச்சி நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீதி உள்ள 50 சதவீத வீடுகளை மற்றும் மனைகளை. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச் சாதியினருக்கும், மாநில அரசு ஊழியர்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும். உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கும், இராணுவ சிப்பந்திகளுக்கும், முடிதிருத்துவோர் மற்றும் சலவையாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் முறையே 10 சதவீதம், 18.5 சதவீதம், 11 சதவீதம், 7.5 சதவீதம் 5 சதவீதம், 48 சதவீதம் என்ற அடிப்படையில் செய்யப்பட்டன.

# வெட்டப்பட்ட விரலை ஒட்டிடலாம் விரைவில்!

நவீன மருத்துவ உலகம் பல்வேறு வியப்புகளையும் சாதனைகளையும் இந்த நாட்களில் உருவாக்கி வருகிறது. கற்பனையில் வடித்தெடுக்கப்பட்ட செய்திகள்—கதைகளில் வருணிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்—கனவில்கூட எண்ணிப் பார்க்க இயலாத பல உண்மைகள் மருத்துவ உலகத்தின் அயராத தொண்டினால் நடைமுறைக்கு வந்துள்ளன. அந்த வரிசையில் சிறப்பிடம் பெறுவது பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை; அதிலும் குறிப்பாக மைக்ரோ அறுவைச் சிகிச்சை ஆகும். இதன் வாயிலாக வெட்டப்பட்ட விரலை ஒட்டலாம்; துண்டிக்கப்பட்ட கரத்தை இணைக்கலாம். சென்னை நகரில் ஸ்டான்லி மருத்துவ மனையில் இந்த அதிசயம் நடைபெறுகிறது—நடத்தப் பெறுகிறது.

விபத்தின் காரணமாக ஒருவரின் கைவிரல், கால்விரல் துண்டிக்கப்பட நேரலாம். அப்படித் துண்டிக்கப்பட்ட பின்னர், மருத்துவச் சிகிச்சை செய்து புண் ஆற்றப்பட்டாலும் கூட, ஊனமுற்றவராக—உறுப்புக் குறைவு உள்ளவராகத்தான் வாழ நேர்ந்தது—ஒரு காலத்தில்! ஆனால் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையும் மைக்ரோ அறுவைச் சிகிச்சையும் புதிய நம்பிக்கையை இந்த நாட்களில் அளித்து வருகின்றன. பட்ட மரம் துளிர்ப்பது போல, வெட்டுப்பட்ட விரலும் ஒட்டப்படுகிறது. செயற்கரிய இந்தச் செயலை ஸ்டான்லி மருத்துவ மனை சாதித்து வரலாற்றுப் பெருமை பெறுகிறது.

25 வயதுள்ள இளைஞர் ஒருவர் வலக்கரத்தின் பெருவிரல் துண்டிக்கப்பட்டு, மருத்துவ மனைக்கு வந்தவர் தக்க வகையில் மைக்ரோ அறுவைச்சிகிச்சை செய்ததன் மூலம் வெட்டப்பட்ட விரல் ஒட்டப்பட்டுள்ளது இழந்த விரலை அவர் திரும்பப் பெற்றிருக்கிறார். அந்த விரலை அவரால் தற்போது நீட்ட, மடக்க முடிகிறது.

மற்றோர் இளைஞர், 20 வயது அவரது வலது கரத்தின் உள்ளங்கை சரிபாதியாகத் துண்டிக்கப்பட்டு விட்டது—பணியின் போது ஏற்பட்டவிபத்தின் காரணமாக; சிகிச்சைக்கு ஸ்டான்லியை நோக்கி விரைந்தார். தக்கவகையில் சிகிச்சையளிக்கப்பட்டு உள்ளங்கை இணைக்கப்பட்டது. இந்திய நாட்டிலேயே இந்த வகையில் இது முதல் சாதனை எனச் சொல்லப்படுகிறது. ஏறக்குறைய 11 மணி நேரம் மைக்ரோ அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது.

மைக்ரோ அறுவைச் சிகிச்சை என்பது நுட்பமான சிகிச்சை முறையாகும். உடலின் மற்ற பாகங்களில் அறுவைச் சிகிச்சை செய்யப்படும்போது வெறுங் கண்களினால் பார்த்தே செய்து விடலாம். ஆனால் கால் விரல், கைவிரல் போன்ற பகுதிகளை இணைக்கும் சிகிச்சைக்கு வெறும் கண்கள் போதா. அந்தப் பகுதிகளில் பல நுண்ணிய நரம்புகள் உள்ளமையால், மைக்ரோஸ்கோப் என்னும் நுண்ணியல் கண்ணாடியின் துணை கொண்டு 0.8 மில்லி மீட்டரிலிருந்து 1 செ. மீ. அகலம் உள்ள இரத்தக் குழாய்களையும் நரம்புகளையும் கவனமாகப் பார்த்து அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்.

மைக்ரோ அறுவைச் சிகிச்சை மேல்நாடுகளிலும் சைனாவிலும் புதிய சாதனைகளையும் புதிய வரலாற்றையும் உருவாக்கியுள்ளது. நமது நாட்டில் இந்தச் சிகிச்சை முறை சமீப காலத்தில் தான் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. என்றாலும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் சாதனைக்குரியதாகத் திகழ்கிறது. அதற்கு ஸ்டான்லி மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மற்றும் கரம் திருத்தியமைத்தல் துறைதான் முக்கிய காரணம்.

மைக்ரோ அறுவைச் சிகிச்சை செய்வதற்கு முறையான ஆய்வுக் கூடப் பயிற்சி தேவைப்படுகிறது. மிகுந்த பொறுமையும் இருக்க வேண்டும். தினமும் பன்னிரண்டு மணி நேரம் பாடுபடுவதற்குரிய மன ஒருமைப்பாடும் வேண்டும்.

கடந்த 2 ஆண்டுக் காலமாக இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறது ஸ்டான்லி மருத்துவமனை.



உள்ளங்கை வெட்டுப்பட்ட போது...



உள்ளங்கை இணைக்கப்பட்டுள்ள நிலை

# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேலை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை. காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.

**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட் பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்




அதிக வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.35-2317 TM

தொழு நோயினால் பாதிக்கப்பட்ட நரம்புகளையும் மைக்ரோ அறுவைச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்துகிறது இந்தத்துறை. இந்த அரும்பணிக்கு உதவும் வகையில் இந்த நிலையத்திற்குத் தேவைப்படும் கருவிகளை அளித்ததுடன்; பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்துள்ளது தமிழக அரசு. இதனால், அரசு மருத்துவ மனைகளில் மைக்ரோ அறுவைச் சிகிச்சையை வளர்ப்பதில் முன்னோடியாகத் திகழ்கிறது தமிழக அரசு.

வெட்டுப்பட்ட விரல்களையும், கரங்களையும், இணைப்பதற்கு உதவும் இந்தச் சிகிச்சை முறை எதிர்காலத்தில் பல்வேறு வகையான உறுப்புக்களின் சிகிச்சைகளுக்கும் உதவுவது உறுதி. உடலின் ஒரு பகுதியிலிருக்கும் தோல்நரம்பு, எலும்பு ஆகியவற்றை எடுத்து மறு பகுதியில் இடம்பெறச் செய்யும் சாதனையை இதனால் நிகழ்த்த முடியும். யானைக் கால் நோயின் காரணமாக வீக்கம் பெற்றிருக்கிற தசைப் பகுதியையும் நீக்குவதற்கு இந்தச் சிகிச்சை முறை பயன்படும். திருத்தி அமைக்கும் சிகிச்சை முறை எதிர்காலத்தில் மனித குலத்தின் இமாலயச் சாதனையாக விளங்கப் போகிறது.

விபத்துக்கு ஆளாகி விரல் அல்லது கரம் துண்டிக்கப்படுபவர்கள் இந்தச் சிகிச்சைக்காக மருத்துவ மனையை நாடி வருவதற்கு முன்னர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய செய்திகள் சில உள்ளன.

துண்டிக்கப்பட்ட பகுதியை நல்ல-சுத்தமான தண்ணீரால் கழுவி-சுத்தமான பாலிதின் பைக்குள் போட்டு—பையின் வெளிப்புறத்தைச் சுற்றிலும் ஐஸ் கட்டிகளை வைக்க வேண்டும். ஐஸ் கட்டிகள் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. பாலிதீன் பையில் போட்டுக் கொண்டு வந்தால் போதுமானது.

துண்டிக்கப்பட்ட பகுதியில் எக்காரணம் கொண்டும் ஐஸ் கட்டிகளை நேரடியாக வைத்து விடக் கூடாது.

எழுது மை போன்ற திரவப் பொருள் எதையும் ஊற்றக்கூடாது.

கோணி போன்ற அழுக்குப் பொருள்களினாலோ பஞ்சு போன்றவற்றாலோ சுற்றக் கூடாது. பவுடர் எதையும் தூவக் கூடாது.

விபத்து நடைபெற்ற ஒரு மணி நேரத்திற்குள், துண்டிக்கப்பட்ட பகுதியுடன் மருத்துவ மனைக்கு விரைதல் வேண்டும். தாமதம் செய்யக் கூடாது. காலதாமதம் சிகிச்சைக்குரிய முழுப் பயனையும் தராது.

இவ்வாறு எச்சரிக்கையுடன் கொண்டு வரப்பட்டால் மருத்துவர்கள் தக்க வகையில் 8 மணி நேரத்திலிருந்து 11 மணி நேரம் வரைக்குள் மைக்ரோ அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள்.

வெட்டுப்பட்ட பகுதிகள் திருத்தம் செய்யப்பட்ட சில நாட்களுக்குள் அந்தப் பகுதியில் உணர்ச்சி தெரியாவிட்டாலும் நாளாக ஆக உணர்வு ஏற்படுகிறது. எலும்பு வளருகின்றது.

தற்சமயம் வாரத்திற்கு 2½ நாட்கள் மட்டும்தான் மைக்ரோ அறுவைச் சிகிச்சை, ஸ்டான்லி மருத்துவ மனையில் செய்யப்படுகிறது. விரைவில் அறுவைச் சிகிச்சைக்கெனப் புதிய பிரிவும்—புதிய அறுவை அரங்குகளும் உருவாக்கப்பட இருக்கின்றன.

கால், விரல், கைவிரல்கள் வெட்டுப்பட்ட பரிதாப மக்களுக்கு அவற்றை மீண்டும் இணைத்து வாழ்க்கையில் புதிய நம்பிக்கையைக் கொடுக்கும் பணியில் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் பேராசிரியரும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மற்றும் கை அறுவைச் சிகிச்சைத் துறையின் தலைவருமான டாக்டர். ஆர். வெங்கடசாமி அரும்பாடு பட்டு வருகிறார்.

இனிவரும் உலகில் மைக்ரோ அறுவைச் சிகிச்சை பல்வேறு உறுப்புகளின் திருத்த அமைப்புக்கும் பயன்படும் என்பது உறுதி. அறுவைச் சிகிச்சைகளில் 50 சதவீதம் மைக்ரோ அறுவைச் சிகிச்சையின் வாயிலாக நிறைவேற்றப்படும் நிலை ஏற்படப் போவது திண்ணம்—அந்தச் சாதனைக்கு அமைதியானமுறையில்-ஸ்டான்லியின் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைத் துறை ஆற்றிவரும் அருந்தொண்டு துணை புரிகிறது.

-தமிழ்ப்பித்தன்



பெருவிரல் துண்டிக்கப்பட்ட நிலை



பெருவிரல் இணைக்கப்பட்டுள்ள நிலை

உடல் ஊனமுற்றோர் நலன் ஆண்டு

## வாழ்வு தரும்

# வருங்கால வைப்புநிதி அலுவலகம்

கண் பார்வையற்ற மூன்று பேரைக் காண்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார். உருக்கம் மேலிடுகிறது; உள்ளம் பேதலிக்கிறது. தனக்குத் தானே வினாவெழுப்பி, விடையிறுத்துக் கொண்டு அமைதி காண்கிறார் அவர்:

''கண்ணிலார் இம்மூவர் மட்டுமா? எண்ணிலார்! எண்ணிலார் காதிலார்! காலிலார், கையிரார் எண்ணிலார்! உண்ணிலார் எண்ணிலார்! ஏதிருந்தும் உள்நிறைவில்லார் உலகத்தில் எண்ணிலார்! தப்பமுடியாத சாவுகள் மூப்பு நோய் எப்புறமும் உண்டன்றோ, முப்போதும் துன்பன்றோ!...''

—புரட்சிக் கவிஞர் மட்டுமல்ல; இன்னும் பல பேரறிவாளர்களும் கூட உடல் ஊனமுற்றோரைக் கண்டு உள்ளம் ஊனப்பட்டது உண்டு!



சிறப்பாகப் பணி புரிந்தமைக்காக, குடியரசுத் தலைவரிடம் பரிசு பெற்ற செல்வி எம். வி. ஆர். கீதா.

### அனுதாபமும் ஆதரவும்!

ஊனமுற்றோர் நலன் ஆண்டான இந்த ஆண்டில் - இது பற்றிய அவர்களுடைய எழுத்துக்களை - சொற்பொழிவுகளை நினைவுகூர்வது நமது கடமை.

ஆனால் ஒன்று—


உடல் ஊனமுற்றோர் பால் நாமெல்லாம் அனுதாபம் காட்டுவது மட்டுமே அவர்களைக் காப்பாற்றிவிடாது; ஆதரவு காட்ட முன்வரவேண்டும். அதுதான் ஊனமுற்றோர்பால் உளப்பூர்வமாக நாம் காட்டும் பச்சாதாபத்திற்கு அடையாளமாகும்.

அதிலும் குறிப்பாக இந்த ஆண்டானது உடல் ஊனமுற்றோர் நலன் ஆண்டு என அறிவிக்கப்பட்டுள்ள காரணத்தாலே, பலரும் அவர்கள்பால் அன்பு காட்டிவரும் காட்சியைப் பரவலாகக் காணமுடிகிறது. இத்தகைய அன்பு நிரந்தரமானதோ இல்லையோ, சில அரசு அலுவலகங்கள், ஊனமுற்றோர் தம் நலனில் காட்டிவரும் அக்கறை நிரந்தரமானது.

சென்னையிலுள்ள வருங்கால வைப்புநிதி அலுவலகம் (Regional Provident Fund Office) இந்த வகையில் குறிப்பிடத் தக்கதாகத் திகழ்கிறது. உடல்ஊனமுற்றோர் இந்த அலுவலகத்தில் பெரிதும் ஆதரிக்கப்படுகிறார்கள் - அன்பு காட்டப்படுகிறார்கள். இத்தகைய பாசம், ஊனமுற்றோர் நலன் ஆண்டு இது என்பதாலே உண்டானதல்ல.

### முதன் முதலாக

1956 முதலே இங்கு, ஊனமுற்றோர் உள்ளப் பரிவோடு வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் அந்த வகையில் முதன் முதல் வேலையில் சேர்க்கப்பட்ட முதலாவது உடல் ஊனமுற்றவர் திருமதி என். சிவகாமு என்கிற பெண்மணி ஆவார். அவர் இப்போது வரிக் கட்டுப்பாட்டு கணக்கு அதிகாரி (Enforcement Officer) அளவுக்குப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்.





முதலாவதாகப் பணியேற்று முன்னேறிய திருமதி என். சிவகாமு.

கடைசியாக வேலையேற்ற (1.12.80) ஊனமுற்றவர் செல்வி ஜி. சாந்தகுமாரி.

எண்சாண் உடம்பில் இருக்கின்ற அங்கமெலாம் சரியாக இருக்கின்றவர்களை விட, அங்கக் குறைவுடையோர் அதிசயிக்கத் தக்க விதத்தில் பணியாற்றி வரு


பி.எல்.ராஜேந்திரன்





ஊனம் என்கிற எண்ணம் இன்றி வேலையில் கருத்தூன்றியுள்ள திருமதி வி. யசோதா, கே. கார்த்தியாயினி.

கிறார்கள் என்பதற்கு உதாரணம் போல் திகழ்கிறார் இந்த அலுவல கத்தில் பணிபுரியும் செல்வி எம்.வி.ஆர். கீதா. இதற்கான வெகுமதியாக, மத்திய சமூகநலத் துறை, இந்தியக் குடியரசுத் தலைவர் மூலம் ரூ. 500 அளித்துப் பாராட்டியது சென்ற ஆண்டில். இந்தியத் தலைநகராம் டில்லிக்கே சென்று அவர் இந்தப் பரிசைப்



ஆணையர் திரு எஸ்.எஸ். சாட்டர் ஜியின் இருபுறமும், அங்கத்திலே ஒரு குறையிருந் தாலும், அலு வலகப் பணியில் குறை வைக்காத பி. எஸ். பாலசுப்பிரமணியம், சி. சுந்தரமூர்த்தி.

பெற, அரசே போக்குவரத்துச் செலவுகளை ஏற்றுக் கொண்டது.

1975, 76, 77 ஆகிய மூன்று ஆண்டுகளில் மட்டும் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் 41 உடல் ஊனமுற்றோர் எழுத்தர் களாக நியமிக்கப்பட்டிருக்கிறார் கள். அதற்கெனப் பாராட்டி வட் டார வருங்கால வைப்பு நிதி அலுவலக ஆணையருக்கு மத்திய அரசின் தேசியப் பரிசாகக் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப் பட்டது

1978, 79, 80 ஆம் ஆண்டு களில் மேலும் 20 உடல் ஊன முற்றோர் எழுத்தர்களாக இவ் வலுவலகத்தில் நியமிக்கப்பட் டார்கள் இதற்கான பாராட் டாக 2·4·80 அன்று. இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் வட்டார - வருங்கால வைப்பு நிதி அலுவலக ஆணையருக்கு மற்றுமோர் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது

## புதிதாக ஒருவர்

சென்னை, கோவை, மதுரை ஆகிய நகரங்களில் உள்ள இந்த அலுவலகப் பிரிவுகள் அத்தனை யிலுமாக வேலை பார்க்கும் சுமார் 1300 பேர்களில் இப் போது பணியாற்றிடும் இந்த 61 ஊனமுற்றோர் தவிர இருவிழி யிலும் பார்வையிழந்த இன் னொரு பெண்மணிக்கு வேலை தருவதற்கான அனுமதியும் மேலிடத்தில் கோரிபெறப்பட் டிருப்பதாக வருங்காலவைப்புநிதி அலுவலக ஆணையர் எஸ். எஸ். சாட்டர்ஜி பெருமிதத்தோடு தெரிவித்தார்.

''ஒரு கண்ணில் பார்வையிழந் தவர்களால், கேட்கும் சக்தி இழந்தவர்களால், காலோ கையோ ஊனமானவர்களால் கூட அலுவலகப் பணி ஆற்றிவிட முடியும். இரு கண்களிலும் பார் வையற்றவரால் என்ன செய்ய முடியும்?'' என்று அவரை நாம் கேட்டோம்.

''அலுவலகத்திற்காக வாங்கப் பட்ட ஏராளமான ஒயர் பின்னல் பிரம்பு நாற்காலிகள் பழுதடை கிறபோது அவற்றைச் சரிப் படுத்த வெளியேதான் யாரிட மாவது தரவேண்டியிருக்கிறது. அதற்குப் பதில் இங்கேயே ஒரு வரை நியமித்து விட்டால் அந் தச் சிரமம் மிச்சம்தானே? அந்த வேலையில் திறமையான ஒரு பெண்மணி கிடைத்தார். அவ ரைச் சேர்த்துக் கொண்டோம்''. என்று மகிழ்ச்சியோடு தெரிவித் தார் திரு. சாட்டர்ஜி.

இந்த அலுவலகத்தில் பணி யாற்றுகின்ற உடல் ஊனமுற்றோ ருக்கு மொத்த சம்பளத்தொகை போக, கூடுதல் தொகையாக ரூ. 35 வீதம் தரப்படுகிறது.

1977ல், உடல் ஊனமுற்றோர் உலகநாள் விழா தமிழகத்திலே கொண்டாடப்பட்டபோது, ஊன முற்றோர்க்கு இந்த அலுவலகம் தொடர்ந்து காட்டி வருகின்ற பெரும் பரிவு கருதி, தமிழக அரசு நற்சான்றிதழ் வழங் கியது, அரசு தலைமைச் செய லாளர்மூலம்.

''மற்றவர்கள் கேலி செய்வார் களே என்ற அச்சத்தால் வீட்டுக் குள்ளேயே ஊனமுற்றவர்கள் முடங்கிக் கிடக்கத் தேவை யில்லை. அதையெல்லாம் பெரிது படுத்தாமல் அவர்கள் வேலைக்கு வந்து விட்டால் வேறு யாரும் அவர்களுக்கு இணையில்லை!'' என்று கூறும் ஆணையர் திரு. சாட்டர்ஜி ''ஊனமுற்றோருக்கு வேலை தரும் எங்கள் எண்ணம் முற்றுப் பெற்றுவிடவில்லை - தொடரும்'' என்கிறார்.

1980ல், அதிக அளவில் ஊன முற்றோரை வேலையில் அமர்த் தியமைக்காக, இந்த அலுவலகத் திற்கு 'நிம்கர் பரிசு' அண்மையில் தரப்பட்டது. இதனை மாண்பு மிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கினார்.

# குடிநீர் வழங்குதலில் தன்னிறைவு பெறுவதே எங்கள் சீரிய குறிக்கோள்!

**இரண்டு முக்கியத் துறைகளில் இரு பெரும் பணிகள்!**

சென்னை பெருநகர் பகுதியில் நோய்க் கிருமிகளற்ற
தூய்மையான குடிநீர் வழங்குவது எங்கள் பொறுப்பு.
இதில் தன்னிறைவு காணத் திட்டமிட்டு
செயல்படுத்துவதையே எங்கள் குறிக்கோளாகக் கொண்டு
பணியாற்றி வருகிறோம்.


**குடிநீர் வழங்குதல் மட்டுமல்ல! கழிவுநீர் அகற்றுதலும் கூட!**

சுற்றுப்புறத் தூய்மை சுகாதாரத்தின் மேன்மை;
இதைப் பேணிக்காக்க, கழிவுப் பொருட்களை அகற்றி
அவைகளைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதும்
எங்கள் பணியே. இதற்கு நாங்கள் நவீன உத்திகளைக்
கையாளுகிறோம்.
நாங்கள் கடைப்பிடிக்கும் பயன்தரும் வழிமுறைகள்
எங்கும் சுகவாழ்வு நிலவ அடிகோலுகிறது.

MADRAS METROPOLITAN WATER SUPPLY AND SEWERAGE BOARD
METRO WATER
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்

**சென்னை பெருநகர்**
**குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம்,**
**43-46, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.**

## சென்னைக் குடிநீர்



# சட்டமன்றத்திலே...

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்குழு காஞ்சி மாநகரில் ரூ. 10 இலட்சம் செலவில் 1980-81ஆம் ஆண்டு நிதியாண்டில் ஒரு ஹோட்டல் சுற்றுலாமாளிகை கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது குறித்து விரிவான கருத்துக்கள் அக்கழகத்தின் பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

* * *

தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

கண் பார்வையற்றவர்கள் மருத்துவமனை வேலை செய்யும் இடம் கல்விக் கூடம் முதலிய இடங்களுக்குத் தங்கள் இல்லங்களிலிருந்து பேருந்துகளில் இலவசமாக சென்றுவர இலவச பயண அனுமதிச் சீட்டுகள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர ஏனைய போக்குவரத்துக் கழகங்களால் 1979-ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

* * *

இம்மாநிலத்தில் தகுதிவாய்ந்த முதியோகளுக்கு 1,51,224 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர்களால் அனுமதி வழங்கப்பட்டு தற்சமயம் 1,27,610 நபர்கள் உதவித் தொகை பெறுகின்றனர். இதுதவிர தகுதி வாய்ந்த அனைவரும் முதியோர் உதவித்தொகை பெற வழிவகை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

அரசுப் புறம்போக்கு நிலங்கள் 1964 முதல் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஒப்படை செய்யப்படுவதற்கு முன் தனிப்பட்டவர்களுக்கு மேற்படி புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் மீது வழங்கப்பட்ட 2சி பட்டாக்கள் வழக்கில் உள்ளன.

மறு ஒப்படை செய்யும் உத்தேசம் தற்போது இல்லை. எனினும் அவற்றின் மூலம் கிடைக்கும் வரி ஊராட்சிகளின் நிதியில் சேர்க்கப்படுகிறது.

* * *

தமிழ்நாட்டில், சென்னை, கன்னியாகுமரி, பெரியார். நீலகிரி மாவட்டங்களைத் தவிர 12 மாவட்டங்களில் 1.6.1979 முதல் நிலப் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டம் (நடப்பு காலத்திற்கிணையவைக்கும் பதிவுத் திட்டம்) அமல்படுத்தப்பட்டு, அத்திட்டம் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது.

* * *

தமிழ்நாட்டில் நீதிமன்றங்களில் குற்ற வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதக் காலத்திற்குள் அவ்வழக்குகளை விரைவாக முடிவு செய்வதற்காக சென்னை உயர்நீதிமன்றம் இம்மாநிலத்திலுள்ள மாஜிஸ்டிரேட்டுகளுக்கு கட்டளைகள் பிறப்பித்துள்ளது.

* * *

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் கிண்டி, வேளச்சேரி பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடை வசதிக்கென ரூ. 106.46 இலட்ச மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட திட்டத்தை இவ்வாண்டு முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

* * *

பொதுத் துறையில் நிறுவ இருக்கும் செய்தித்தாள் மற்றும் காகித ஆலையை திருச்சி மாவட்டத்தில் புகளூரில் நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* * *

மாவட்ட வேலைத் தேடித்தரும் நிறுவனங்களில் (District Employment Exchange) வேலைக்காக பெயரைப் பதிவு செய்து சுமார் பத்தாண்டுகளாகியும் இதுவரை வேலை வாய்ப்பு கிடைக்காமல் எண்ணற்ற இளைஞர்கள் அவதியுறுவதை நீக்க அரசு எடுத்துவரும் துரிதமான நடவடிக்கைகள்:

வேலை வாய்ப்பகங்களில் சுழல் செல்லுபடிப் பதிவேட்டில் வேலைக்காக பதிவு செய்து பத்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 30.9.1980ல் கணக்கிட்ட



மொத்த எண்ணிக்கையில் 0.7 சதவீதமாகும். இவர்களுக்குப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. வேலை வாய்ப்பகங்களில் சுழல் (Rotation) முறைக்கு மற்றவர்களை போல் உட்படுத்தாமல் இதர நிபந்தனைகளாகிய வயது மற்றும் கல்வித் தகுதிகளை கொண்டிருப்பின் வேலைக்கான காலியிடங்களுக்கு இவர்கள் பெயர்களைப்பரிந்துரை செய்யப்படுகிறது.

2. இவர்கள் வேலைவாய்ப்பக அலுவலர்களிடம் தங்கள் பெயரைத் தகுதியான காலியிடங்களுக்கு உடனடியாகப் பரிந்துரை செய்ய முறையிடலாம்.

3. வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து நீண்டகாலமாக வேலைவாய்ப்பிற்கு காத்திருக்கும் பதிவாளர்களுக்கு, பணியிலமர்த்தும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கவனிக்க ஒரு சிறப்புப் பதிவேடு பயன்படுத்தப்படுகிறது.

* * *

1980 மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வில் 100 சதவிகிதம் பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை 56. அவைகளில் அரசுப் பள்ளிகள் 20; தனியார் பள்ளிகள் 34; மீதமிரண்டு நகராட்சிப் பள்ளிகளாகும்.

* * *

அனைத்து நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்கட்கு பணிப்படி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

அனைத்திந்திய வழக்கறிஞர்கள் மன்றத்தின் இறுதி அறிக்கையைப் பொறுத்து தற்போதுள்ள 3 வருட பி.எல். சட்டப் படிப்பை மாற்றியமைப்பது பற்றி அரசு முடிவெடுக்கும்.

* * *


சிறைத் துறையிலிருந்து நன்னடத்தைப் பிரிவை பிரித்து அது தனித்துறையாக இயங்க வேண்டுமென்று தமிழ்நாடு சிறை நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. அப்பரிந்துரையின் மீது, உயர்நீதி மன்றம் மற்றும் சிறைத் துறைத் தலைவரிடமிருந்து தருவிக்கப்பெற்ற அறிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது.

* * *

மேட்டூர் அணையிலிருந்து சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்கு குடி தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், பரமக்குடி மற்றும் கடலாடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 78 சிற்றூர்களுக்காக ஒரு கூட்டு குடிநீர்த் திட்டம் 1978ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அக்கப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. பொது மக்கள் ஆட்சேபம் செய்ததால் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



மருதையாற்றில் பெரம்பலூர் வட்டத்தில் நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (பாசனம்) ஆய்வில் உள்ளது.

* * *

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரை கால்வாயில் மடிச்சல் கிளைக் கால்வாய் வெட்டப்பட வேண்டியகோரிக்கைமீது அரசு நவம்பர் 1978ல் ரூ. 18.10 இலட்சம் அனுமதி அளித்தது. ஆனால், கேரள அரசுடன் இம்மாநில அரசு செய்து கொண்ட ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் கொடுப்பதற்குப் பதிலாக தற்போது வினாடிக்கு 50 விழுக்காடு (50 ) தண்ணீர்தான் கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து கொடுக்கிறது. மேலும்ஆயக்கட்டுதாரர்கள் போதிய தண்ணீர் கிடைக்காததால் தங்கள் நிலங்களை மேம்படுத்த முன்வரவில்லை. ஆகையால் இதுபற்றி மறு ஆய்வு செய்து, ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் உறுதியாகக் கிடைக்கும் வரை இத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

* * *

குமரி மாவட்டத்தில் பழங்குடி மக்களுக்கு வாளேற்றிவயல் என்னுமிடத்தில் கட்டியிருக்கும் பள்ளிக்கூடத்திற்குப் போதுமான ஆசிரியர்கள் இருக்கைகள் இல்லை என்பது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. தேவையான விவரங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிகள் நல இயக்குநர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் கேட்கப்பட்டுள்ளன. அவை இன்னமும் முழுமையாக வந்து சேரவில்லை. விவரங்கள் கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

* * *

தஞ்சாவூர் மாவட்டம் தில்லையாடி வள்ளியம்மை நகரில் கட்டப்பட்ட வீடுகள், பயன்பெறுவோர் குடியேறியதிலிருந்து ஒரு வருடத்தில் மழைக்காலத்தில் ஒழுகுவது உண்மையே. 1973-74ல் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையால் இந்த வீடுகள் பழுது பார்க்கப்பட்டன.

ஆதிதிராவிட மற்றும் ஆதிவாசிகள் நலத் துறை இயக்குநர் இவ்வீடுகளைப் பழுது பார்க்க தற்போது கருத்துரு ஒன்றினை அரசுக்கு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

கூட்டுறவு மின்சார விநியோக அமைப்பு முறை என்ற நிலையை அமைக்க மின்வாரியம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளை நவீனப் படுத்துதல், கீழ்பவானி பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல், கோதையாறு பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்துதல், காவிரி டெல்டா சீரமைப்பு செய்தல் ஆகிய நான்கு திட்டங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன.

* * *

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோதையாறு பாசனத்திட்டம் முழுவதையும் நவீனப்படுத்தும் திட்டம் விரிவான ஆய் வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிந்த பிறகு, உலக வங்கியின் உதவி பெறு வது என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.


* * *

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம், மரவக்காடு-வடஆர்க்காடு கிராமங் களில் 5,400 ஏக்கராக்கள் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்ய அரசு ஆணை பிறப்பித்துள் ளது. திட்டப்பகுதியில் தல எல்லை வேறுபாடு குறிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதில் 4092.33 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்திக்கு உகந்தது என தீர்மானிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 120 இலட்ச மாகும்.

* * *

இத்திட்டத்தில் இதுவரை (பிப்ரவரி 81) ரூபாய் 5.58 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக 10 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் மற்றும் 400-300 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் ( Seasonal Labourers ) அளிக்கப்பட்டு வரு கிறது. 1982ம் ஆண்டு முதல் கட்டமாக இத்திட்டத்தில் 10,000 டன் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம் எல்லா வகை யிலும் பூர்த்தியாகும் பொழுது 1.20000 டன் உப்பு உற்பத்தி செய்யும் என்று மதிப்பிட பட்டுள்ளது. மேலும் ஜிப்சம் ( Gvpsum ) போன்ற கனிமங்களும் உற்பத்தி செய்யப் படும். இத்திட்டம் முழுமையாக செயல்படுத் தப்பட்டபின் 100 நபர்களுக்கு நிரந்தரவேலை வாய்ப்பும், 1000 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

* * *



குடியாத்தம் மற்றும் அதனைச் சுற்றி யுள்ள பகுதிகளில் சிறு தீப்பெட்டி உற்பத்தி யாளர்களுக்கு தேவை புரிய கீழ்க்கண்ட மூன்று சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

1. குடியாத்தம் சிறு தீப்பெட்டி உற் பத்தியாளர் சேவைத் தொழிற்கூட் டுறவுச் சங்கம், குடியாத்தம்
2. வளத்தூர் சிறு தீப்பெட்டி உற்பத்தி யாளர் சேவைத் தொழிற்கூட்டுறவுச் சங்கம், வளத்தூர்.
3. பேரறிஞர் அண்ணா சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குடியாத்தம்.

முதற்கூறிய இரண்டுசங்கங்களும் இயங்கி வருகின்றன. மூன்றாவது சங்கம் விரைவில் செயற்படத் துவங்கும் மேற்குறிப்பிட்ட மூன்று சேவை சங்கங்களுக்கும் 300 சிறு தீப் பெட்டி உற்பத்தியாளர்களுக்கு சேவை புரிய இயலும்.

* * *

1969ஆம் வருடம் காஞ்சிபுரம் ஓரிக்கை தொழிற்பேட்டை 4 வாடகை தொழிற்கூடங் களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 4 தொழிற் கூடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழில் கள் நடைபெற்று வருகின்றன. மேலும் 10 சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள் சிட்கோ நிறு வனத்தால் கட்டப்பட்டு வருகின்றன. உப யோகப்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை சீர்திருத்தப்பட்ட மனைகளாக மாற்றி யமைக்க 'சிட்கோ' நிறுவனத்துக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

* * *

தொண்டி-மதுரை-கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத் திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.


* * *

திருச்சி மாவட்டத்தில் கரூரில், அமரா வதி ஆற்றின் குறுக்கே பழுதடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் பணி மத்திய அரசால் அங்கீகரிப்பட்டு தமிழ் நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திற்கு அளிக் கப்பட்டுள்ளது. இப்பணி 30.4.83 அன்று முடி வடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

* * *

ஆசிரியைப்பயிற்சிப் பள்ளி செவிலியர் பயிற்சி அரசுப் பணி ஆகியவைகளில் சேர இருக்கும் வயது வரம்பு விதிகளில் இருந்து விதவைகளுக்கு விதிவிலக்கு அளிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில்
கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா,
மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற
சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள்,
இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—
படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள்,
விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட
பாங்கான தோல், தோலினாலான பொருட்கள்,
பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள்,
சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள்,
ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த
பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ்
பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு
ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட
தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை—600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

ஒவ்வொரு மின் வழங்கு கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு ஏறத்தாழ ரூ. 150 இலட்சம் ஆரம்ப மூலதனம் தேவைப்படும்.

* * *

முதலில் ஒரு கிராமிய மின் வழங்கு கூட்டுறவுச் சங்கம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணத்தில் 1.7.80ல் இருந்து துவக்கப்பட்டு செயல்படுகிறது. இரண்டாவது கிராமிய மின் வழங்கு கூட்டுறவு சங்கத்தை புதுக்கோட்டையில் உள்ள திருமயம் என்னும் ஊரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

* * *

நெல்லை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது. திருநெல்வேலியில் ஆரம்பிக்கலாம் என்று கருதப்படுகிறது.

* * *

பழனி தேவஸ்தானத்தால் நடத்தப்படும் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்கு அரசு மான்யம் வழங்க பரிசீலித்து வருகிறது.

* * *

டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கலந்து கொண்டார். அதுபோது மாநாட்டில் எடுக்கப்பட்ட 49 முடிவுகளில் முக்கிய முடிவுகள் பின்வருமாறு:

1. 1947ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தில் ''பொருத்தமான அரசு'', ''தொழில்'', ''சம்பளம்'', ''தொழிலாளர்'' போன்ற சொற்களுக்கான பொருள் விளக்கங்களைத் திருத்துதல் அல்லது விரிவுபடுத்துதல், தனிப்பட்ட தொழிலாளி தொழில் நீதிமன்றத்தில் நேரிடையாக அரசின் தலையீடு இன்றி வழக்குத் தொடர வழி செய்தல், சமரச அலுவலர்கட்கு அதிக அதிகாரங்கள் அளித்தல், தொழிற் தகராறுகளில் துரிதமாக முடிவு காண கால நிர்ணயம் செய்தல். தொழில் நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புக்களை அமல்படுத்த அவைகளுக்கு அதிகாரம் அளித்தல் போன்றவற்றிற்காகத் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

2. 1946ஆம் ஆண்டு தொழில் நிலைஆணைகள் சட்டத்தில், பணியாளர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் காலத்தில் வாழ்க்கைப்படி வழங்க வழி செய்தல் முதலியவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்.

3. 1926ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழ் தொழிற் சங்கங்களைப் பதிவு செய்ய நிறுவனத்தில் உள்ளவர்களில் குறைந்தபட்சம் 10 சதவீதமாவது உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்தல், குறைந்தபட்ச சந்தாவினை ஒரு ரூபாயாக உயர்த்துதல், விவசாய கிராமப்புறத் தொழிலாளர்கட்கும் சட்டத்தினைப் பொருந்தச் செய்தல், நிர்வாகம் பொறுப்பில் வெளியார்கள் 25 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று விதித்தல் முதலியவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்.

4. பல்வேறு சம்பளக் குழுக்களின் பரிந்துரைகளை அமல்படுத்தி மைய அரசு ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும்.

5. 1948ம் ஆண்டு குறைந்த அளவுக் கூலிச் சட்டத்தில், அடிக்கடி சம்பள விகிதங்களை மாற்றி அமைத்தல் போன்றவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்

6. இதேபோல் ஊதியக் கொடைச் சட்டம் பணியாளர் வைப்பு நிதிச் சட்டம், பணியாளர் மாநில காப்புறுதிச் சட்டம் முதலிய சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.


7. மேலும் தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு, வீட்டு வசதித் திட்டம் பாதுகாப்பு வசதிகளை அதிகப்படுத்துதல், சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை தடுத்தல் போன்ற பல்வேறு பொருள்களை பற்றியும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

கொல்லிமலையில் ஓடும் ஐந்தாறு ஆகாச நீர் வீழ்ச்சியில் மின்சாரம் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இப்பொழுதுள்ள விதிமுறைகளின்படி ரூ.10- ம் அதற்குள்ளும் நிலவரி செலுத்துவோர் தீ விபத்தால் பாதிக்கப்பட்டு, அவர்கள் வீடுகளைத் திரும்பக் கட்டிக்கொள்ள முடியாத அளவு ஏழையாக இருந்தால் நிதி உதவி பெற முடியும். ரூ. 10-க்கு மேல் நிலவரி செலுத்தும் நபர்கள் சம்பந்தப்பட்டவரை, அவர்களின் ஏழ்மை நிலை, சேதத்தின் அளவு, சம்பந்தப்பட்ட கிராமம் அல்லது வட்டத்தில் உள்ள பாதகமான பருவநிலை-ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி தனி வகையாக, நிதியுதவி அனுமதிக்கவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வடார்க்காடு மாவட்டத்தில் வேலூரில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் மருத்துவ மனை ரூ 15 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 8.1.1981 முதல் செயல்படத்தொடங்கியுள்ளது.

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் சித்தமல்லி ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற 6.2.81ல் அரசு ஆணையிட்டுள்ளது.



தமிழ்நாட்டில் புதிதாக ஐந்து பாலிடெக்னிக்குகள் துவக்கலாமென்று தொழில் நுட்ப கல்வி வாரியம் தமிழக அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

பட்டுக்கோட்டை-அரசினர் பாலிடெக்னிக்
திருச்சி- நாராயணசாமி அய்யர் அறக்கட்டளை மகளிர் பாலிடெக்னிக்.
கோவை- குன்னியமுத்தூர்; வி.எல்.வி. நாயுடு அறக்கட்டளை பாலிடெக்னிக்.
சேலம்- திரு. சௌடேஸ்வரி மகாஜன அறக்கட்டளை மகளிர் பாலிடெக்னிக்.
சேலம்- குமாரபாளையம்: ஜே.கே. ரங்கம்மாள் அறக்கட்டளை பாலிடெக்னிக்.
மதுரை- சிலைமான்: ருக்மணி அறக்கட்டளை பாலிடெக்னிக்.

* * *

வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள அரும்பருதி என்னும் கிராமத்தில் வசிக்கும் 70 நரிக்குறவர் குடும்பங்களுக்கு, பாசன கிணறுகள் தோண்டுவதற்கு சென்னை, பிற்பட்டோர் நல இயக்குநர் அனுப்பிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அக்குடும்பங்களில் பலவற்றிற்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் கருத்துரு ஒன்றும் அரசின் பரிசீலனையிலுள்ளது.

* * *

பிற்பட்ட வகுப்பினருள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும் சேருவதற்குத் தனியாக ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரம் ஒதுக்கீடு செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

பேருந்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்பட்டால், ஒவ்வொரு மாவட்டத்திலும், தனித்தனி போக்குவரத்துக் கழகங்களை அமைக்கலாம் என்ற பரிந்துரையை கொள்கையளவில் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதன் பேரில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

* * *

கும்பகோணத்தில் சாலை ஓர தங்கும் விடுதி ( Motel ) அமைப்பது பற்றிய திட்டம் ஒன்று தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

* * *

திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்பு நாதசுவாமி ஆலயத்தின் திருப்பணி வேலைகள் செய்ய ரூ. 1,16,500 மற்றும் ரூ. 1,10,00 மதிப்பீட்டில் இரண்டு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் மேல் தளம் பழுது பார்த்தால் வேலையின் ஒரு பகுதி மட்டும் நடந்துள்ளது.



மாமல்லபுரத்தில் ஒலி-ஒளி காட்சி அமைப்பது பற்றிய திட்டங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு இந்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு பரிசீலித்து அனுப்பிய பின் முடிவு எடுக்கப்படும்.

* * *

பாவலர் செய்குத்தம்பியின் நினைவாக நாகர்கோவிலை அடுத்த கோட்டாறில் நினைவு மண்டபம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

துறையூர் அரசினர் மருத்துவமனையை மேலும் 24 படுக்கைகள் கொண்டதாக விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திட்ட மதிப்பீடு ரூபாய் 2.05 இலட்சம்

* * *

சண்முகாநதி நீர்மின் திட்டம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு மைய அரசு செப்டம்பரில் 1980ல் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.

* * *

முதல் நிலை, தமிழ் ஆசிரியராகத் தன் தகுதியை உயர்த்திக் கொண்ட இடைநிலை ஆசிரியர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்க அரசு பரிசிலித்து வருகின்றது.

* * *

பாலாற்றுப் படுகையில் பழைய சீவரத்துக்கும் வாலாஜாபாத்துக்கும் அருகில் உள்ள இரண்டு நிலையங்களிலிருந்து நீர் எடுத்து ஆலந்தூர் பல்லாவரம் மற்றும் வழியிலுள்ள ஊர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

* * *

தற்போது உலக வங்கி உதவி பெற்று தமிழ்நாட்டில் பெரியாறு-வைகைப் பாசனத் திட்டம் ஒன்றுதான் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது.

அட்டைப் படக் கட்டுரை

# தஞ்சை மாவட்டத்தில்

# தன்னிறைவுத் திட்டம்



கிராமங்கள் ஊர்ந்து ஊர்ந்து ஊர்களாயின; ஊர்கள் நகர்ந்து நகர்ந்து நகரங்களாயின; நகரங்கள் படர்ந்து படர்ந்து பட்டினங்களாயின என்பார்கள். எது எவ்வாறானாலும், எல்லாவற்றுக்கும் அடிப்படை கிராமங்களே!

கிராமங்களின் வளர்ச்சியும் வளமுமே நம்நாட்டு நகரங்களிலும் பட்டினங்களிலும் பிரதிபலிக்கின்றன. கிராமத் தாயின் பாசமும் பராமரிப்புமே நகரம்-பட்டினம் ஆகிய குழந்தைகளின் வலிவுக்கும் நிமிர்வுக்கும் முழுமுதற் காரணங்களாகின்றன.

இவ்வளவுஅருமை பெருமைக்கு உரிய கிராமங்கள் தன்னைப் பொறுத்தமட்டிலே நிறைவு பெற்றிட வேண்டாமா?

இந்தக்கேள்விக்கு விடைபோல் பிறந்ததுதான் 'தன்னிறைவுத் திட்டம்'!

தமிழக அரசால் பெரும் சிந்தனைக்குப் பின்னாலே வகுக்கப்பட்டு, அனைத்து மாவட்டத்தையும் சேர்ந்த பலவீனமான கிராமங்கள் தொகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுவரும் சிறப்பான திட்டமிது.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களையும் இத்திட்டத்தின் கீழ் இணைத்திட எண்ணமிருந்தாலும், அரசின் பொருளாதார நிலை அதற்கு இடம் தரவில்லை.

எனவே, உடனடியாகக் கவனிக்க வேண்டிய கிராமங்கள் எனத் தன்னிறைவுத் திட்டத்தின் முதற்கட்டமாக, 69 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1980-81ஆம் ஆண்டின் குறிப்பிட்ட காலக் கெடுவில் அந்த ஒன்றியங்களிலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னாலே 1981-82ஆம் ஆண்டுப் பணிகளுக்கான இரண்டாவது கட்டமாகச் 150 ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தெளிவுபடுத்தப் படவிருக்கின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை விட- இன்னபிற சமுதாய நலத் திட்டங்களைவிட இந்தத் தன்னிறைவுத் திட்டம் உயரியதாக விளங்குவதாகும்.

குடிநீர் வசதிபெறாத நிலையில் இன்றுமுள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துதரல்..

இணைப்புச் சாலைகள் அமைத்தல்.....

சிறு பாலங்களைக் கட்டுதல்...

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இடுகாட்டுப் பாதையை வசதியுடையதாக்கித் தரல்...

கல்விக் கண் திறந்திடப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்....

தாய்சேய் நல விடுதிகளைக் கட்டித் தரல்....

ஊரக மருந்தகங்கள் உருவாக்கித்தரல்......

சிறுபாசனத் திட்டங்களை மேம்படுத்தல்....

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதி செய்து தருதல்.....

—ஆகிய ஒன்பது திட்டங்கள் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் உட்பிரிவுகளாகும். நவரத்தினங்களாகத் திகழும் இத் திட்டங்கள் இம்மாதத்தோடு முதற் கட்டப் பணிகளாக ஏறத்தாழ எல்லா ஒன்றியங்களிலும் நிறைவேறுகின்றன.

அப்படிப்பட்ட அதிவேகச் செயற்பாட்டு ஒன்றியங்கள் உள்ள மாவட்டங்களும், தமிழகத்தின் மைய மாவட்டங்களுமான தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி ஆகிய இரு மாவட்டங்களில் - அண்மையில் - தன்னிறைவுத் திட்ட நிறைவேற்றத்தை நேரில் காணும் சுற்றுப் பயணம் ஒன்று மேற்கொண்டோம்.

அந்த ஏழு இனிய நாட்களின் பின்னாலே எங்கள் நெஞ்சம் நினைத்தது இது தான் -''தமிழகத்தின் அத்தனை மாவட்டங்களிலும் இவ்வகையிலான ஏற்றமும் சுறுசுறுப்பும் பரவலாக உண்டாகுமேயானால், தமிழகத்துக்

இல. ராஜேந்திரன்

**தஞ்சை மாவட்டத்தில்**

**இத்திட்டத்தால் பயன்பெறும் கிராமங்களின் எண்ணிக்கை : 261.**

**மக்கட் தொகை : 3.94 இலட்சம்**

**பயன்பெறும் அரிசனக் குடியிருப்புகளின் மக்கட்தொகை : 1.32 இலட்சம்**

**திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ 515.25 இலட்சம்**

**செலவிடப்பட்ட தொகை ரூ. 371.47 இலட்சம்**

**அரசு மான்யம் ரூ 268.58 இலட்சம்**

**ஊராட்சி ஒன்றியங்களின் பங்குத் தொகை : 102.89 இலட்சம்**

குத் தமிழகம்தான் இணை என்கிற நிலைதான் இருக்குமே அல்லாமல் வேறெந்த மாநிலமும் ஈடுதர முடியாது!''

**தஞ்சை மாவட்டம்**

தஞ்சை மாவட்டத்தில் -பூதலூர், கீழ்வேளூர், குத்தாலம், கோட்டூர், திருத்துறைப் பூண்டி ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்கள் தன்னிறைவுத் திட்டத்தின் முதற் கட்டப் பணி நிறைவேற்றத்தக்க ஒன்றியங்களாக அரசால் தேர்ந்தெடுத்து அறிவிக்கப்பட்டன.

'பூவிரி பொழில் சூழ் காவிரி' பாயும் தஞ்சை என்று கூறப்பட்டாலும் கோடை தலை தூக்கும் நாட்களில் தஞ்சையின் மேற்குப் பகுதி ஏறத்தாழ வறட்சிப் பிரதேசமாகவே மாறிவிடும் என்பது யாராலும் மறுக்க முடியாதது. 'வான்பொய்ப்பினும் தான்பொய்யாக் காவிரி'க்குக் கரிகாற் பெருவளத்தான் கல்லணை கட்டியது இந்தப் பகுதியிலே தான்!

**என்ன இருந்து என்ன?**

மேற்குத் தஞ்சைப் பகுதி வறண்ட கண்டமாகவே காட்சி தருகிற இந்த வேளையில், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் தளர்வின்றி நிறைவேற்றப்பட்டுள்ள வியப்பினைக் கண்டோம்.

கீழ்வேளூர், குத்தாலம், கோட்டூர், திருத்துறைப் பூண்டி ஆகிய மற்ற ஒன்றியங்களோ தஞ்சைக்குக் கிழக்குப் பகுதியிலே அமைந்துள்ளவைகளாகும். இங்கெல்லாம் அத்தனை வறட்சியில்லை.

**பூதலூர்**

அவற்றுள்சில ஒன்றியங்களைப் பார்வையிட எண்ணி, முதலாவதாகப் பூதலூர் ஒன்றியத்திற்குச் செல்கிறோம்.

''தமிழகத்திலேயே சிறந்த ஊராட்சி ஒன்றியம் என்பதற்கான பரிசு பெற்ற ஒன்றியம் எங்களுடையது'' என்று பெருமையோடு சொல்லிக் கொண்ட வட்டார வளர்ச்சி அதிகாரி திரு எம். சிவசண்முகம்-சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்கியமைக்காக, கதர் விற்பனையில் மேம்பட்டு நின்றதற்காக என்று பல்வேறு நற்பணிகளுக்காகப் பூதலூர் ஊராட்சி ஒன்றியம் பெற்ற பரிசுகளையும் நற்சான்றிதழ்களையும் நமக்குக் காட்டிவிட்டு, கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. எஸ். முருகேசன் அவர்களோடு-தமது ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டப்பணிகள் பற்றிய விவரங்களைத் தங்குதடையின்றி அடுக்கடுக்காக நமக்குத் தெரிவிக்கிறார்.

மொத்தம் 39 பாடசாலைகள் உள்ள இந்த ஒன்றியத்தில், தன்னிறைவுத்திட்டத்தின்கீழ் துருசுப்பட்டியில் ஒரு பள்ளிக் கட்டிடமும் மாரனேரியில் ஒன்றும் கட்டப்பட்டுள்ளன.

அரிசனக் குடியிருப்புக்களிலிருந்து இடுகாட்டுக்கான பாதைகள் 35 அமைக்கப்பட்டிருக்கின்றன.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 14 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஐயனாபுரம், இளங்காடு, சோழகம்பட்டி, திருக்காட்டுப்பள்ளி ஆகிய நான்கு ஊர்களில் தாய்சேய் நலவிடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

சுமார் பதினோராயிரம் பேர் பயன்பெறும் விதத்தில், மாரனேரியில் ஒரு சிறு மருந்தகமும் பூதலூரில் ஓர் ஊராட்சி ஒன்றியக் கட்டடமும் உருவாக்கப்பட்டுள்ளன.


148 சிறு மதகுகளும், 3 பெரிய பாலங்களும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழே பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 50 கிலோ மீட்டர் தூர அளவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவை தவிர, பூதலூரிலேயே ரூ 7,500 செலவில் பெண்கள் கழிப்பிடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

பூதலூர் ஒன்றியத்தில், சோழகம்பட்டி கிராமச் சாலையில் உள்ள ஒரு குளத்திற்குத் தடுப்புச் சுவரே எழுப்பியிருக்கிறார்கள் தன்னிறைவுத் திட்டத்தின்கீழே!

**மாரனேரி பாடசாலை அன்றும்**



இந்த ஒன்றியத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் கோயிலடி ஊராட்சியில் உள்ள சுக்காம்பார் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து ஆறு தெருக்களுக்குக் குழாய் இணைப்பு தரப்பட்டுள்ளது.

கொள்ளிடக் கரை ஊராளவாலும், இந்தக் கிராம மக்கள்-தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் செய்துதரப்பட்டுள்ள இந்தக் குடிநீர்வசதிக்காக அரசை வாயாரப் புகழ்கிறார்கள். இப்படியோர் அரிய பணிசெய்ய நேர்ந்தமைக்காக அதிகாரிகளெல்லாம் பெருமகிழ்ச்சி கொள்கிறார்கள் அங்கே.

பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கான தன்னிறைவுத் திட்ட வேலைகளின் திட்ட மதிப்பீடு ரூ. 51.65 இலட்சமாகும். தன்னிறைவுத் திட்டத்திற்காகவும் வேலைக்கு உணவு திட்டத்திற்காகவும் தரப்பட்ட அரசு மான்யம் ரூ. 27.82 இலட்சம். பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தின் செலவுப் பங்கு ரூ. 21.18 இலட்சம். கூடுதல் செலவோ ரூ. 49 இலட்சம். இரண்டு இலட்சம் ரூபாய் திட்டத்தில் பால வேலைகள் நடந்து முடியவிருக்கின்றன.

## கீழ்வேளூர்

தன்னிறைவுத் திட்டத்தின் அத்தனைக் கூறுகளும், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்திலும் தடம் பதித்துள்ளன. இயற்கை நீரூற்று ஒன்றினாலே மட்டுமல்ல; இத்திட்டத்தினாலும் இந்த ஒன்றியம் புதுப்பொலிவு பெற்று விளங்குவதை நாம் காண்கிறோம்.

சில திட்ட நிறைவேற்றங்களை நாமே நேரில் போய்ப் பார்க்கிறோம்.

முக்கியச் சாலைக்கும் ஜீவா நகருக்கும் இடையே இந்த ஒன்றியத்தில், தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இணைப்புச் சாலை போட்டிருக்கிறார்கள். ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள அந்தச் சாலை 3 மீட்டர் அகலத்தில் பத்தாயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திருக்கண்ணங்குடியில் - கீழ்வேளூர், ஆழியூர் வழியே செல்லும் இணைப்புச் சாலை ஒன்றையும் சொட்டாள் வண்ணம் கூத்தூர் செல்லும் ஒரு கிலோமீட்டர் தூர கப்பிச் சாலையையும் நாம் பார்வையிடுகிறோம்.

இரும்புக்கண்ணியில் உள்ள குடிசைகளில் 3,459க்கு ‘குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்’ தின்கீழ் விளக்குப் போட்டிருக்கிறார்கள். இதற்காகவும், தன்னிறைவுத்திட்டத்தின் மூலம் பெரும்பலன் பெற நேர்ந்தமைக்காகவும் இந்த ஊராட்சி ஒன்றிய மக்கள் உள்ளம் பூரித்திருக்கிறார்கள்!

## திருத்துறைப்பூண்டி

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு பா. இராமச்சந்திரன், தம்முடைய ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள பல்வேறு பணிகளும் பற்றி புள்ளிவிவரங்களோடும்-அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றிய பூரிப்போடும் நமக்குத் தெரிவித்தார்.

‘‘1979-80ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக எங்கள் ஒன்றியத்தில் 28 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. 75 சதவீதத்திற்கும் மேல் பிற்படுத்தப்பட்ட மக்களே வாழும் இந்த வட்டாரம் சுமார் 10 இலட்சம் ரூபாய் உபரி நிதியுடன் செயல்பட்டு வந்தது. தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒன்றியப் பங்குத் தொகை ரூ. 18.45இலட்சம் தேவைப்பட்டதால் அரசிடமிருந்து 8 சதவீத வட்டி அடிப்படையில் ரூ 15 இலட்சம் கடனாகப் பெற்று இதை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறோம். இந்தக் கடனை ஐந்தாண்டுகளில்திருப்பித்தந்து விடுவோம்' என்று பெரும் நம்பிக்கையோடு தெரிவித்தார் அவர்.

ஒன்றியத்தைப் பார்வையிடச் செல்கிறோம் நாம்.


பள்ளிக்கூடக் கட்டிடத்தைப் பொறுத்து இந்த வட்டாரம் முன்பே தன்னிறைவை எட்டியுள்ளதால் இத்திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 196 அரிசனக் குடியிருப்புகளுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் மின் வசதியளிக்கப்பட்டு, மின்னொளியிலே திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவைக் கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

158 குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 86 குடியிருப்புகளுக்கு, சுமார் 23.38 இலட்சத்தில் 120 இணைப்புச்சாலைகள் போடப்பட்டுள்ளன. 86 சிறுபாலங்கள், தடுப்புச் சுவர்கள், சருக்கைகள் ஆகியவைகளும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழே கட்டப்பட்டுள்ளன.

25 அரிசனக்குடியிருப்புகளுக்கு மொத்தம் 22 கிலோமீட்டர் அளவில் மயான சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராம மருந்தகக் கட்டடமொன்று 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு தாய்சேய் நல விடுதிகளும், கிராம மருந்தகமும் இரண்டு மகளிர் கழிவறைகளும் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன.

ராயநல்லூரில் ஊராட்சி மன்றக் கட்டடமொன்று கட்டியிருக்கிறார்கள். ராயநல்லூரில் இதற்கு இடம் கொடுத்து உதவியிருக்கிறார் திரு இராமநாதன் என்பார் ‘‘இந்த 13 சென்ட் நிலத்தை, ஊருக்கு உதவும் நல்ல நோக்கோடுதான் தந்திருக்கிறேனே தவிர, இதனால் எனக்கொன்றும் பெரிய லாபமோ பாதிப்போ இல்லை’’ என்றார் அவர்.

**மாரனேரி பாடசாலை இன்றும்**



# முயற்சியே இல்லாமல், ஆச்சரியகரமாக, சிறு சேமிப்பு விரைவிலேயே கணிசமான தொகையாக உருவெடுக்கிறது !

## அஞ்சலக டெப்பாசிட் திட்டத்தின் மூலம்

தனிப்பட்டவர்களுக்கும் சாதாரண வருவாயுள்ள குடும்பங்களுக்கும் ஒரு லட்சியத் திட்டம்; சிறு சேமிப்புக்களை மொத்தத் தொகையாக்குவதற்குச் சுலபமான திட்டம்.

*பயனுள்ளது*

துவக்க எளியது, எளிய நடைமுறை கொண்டது. பெரும் பயன் அளிப்பது. ஆண்டுக்கு 10.5% கூட்டு வட்டி அளிக்கக் கூடியது. இத்திட்டத்தின் உள்ளடக்கமான ஆயுள் இன்ஷூரன்ஸ் திட்டம், குறைந்த தொகையில் சேமிப்பவர்களுக்கு இரட்டைக் கவர்ச்சியை அளிக்கிறது.

*தொல்லையற்றது*

ரூ. 5 அல்லது அதனுல் பெருக்கவல்லதொரு தொகையைச் செலுத்தி அருகிலுள்ள அஞ்சலகத்தில் ஐந்து வருட ரெக்கரிங் டெப்பாஸிட் கணக்கைத் துவக்குங்கள். ஒவ்வொரு மாதமும் ஒரே சீரான தொகையைச் செலுத்தி வாருங்கள். இதற்குக் கூட நீங்கள் சிரமப்படத் தேவை இல்லை. விரும்பினுல் மகிலாப் பிரதான் ஒருவர் உங்கள் வீட்டிற்கு வந்து டெப்பாஸிட் தொகையை இலவசமாகச் சேகரித்துச் செல்லுவார். நீங்கள் ஏதேனும் ஒரு நிறுவனத்தில் சம்பள தின சேமிப்புத் திட்டத்தில் சேருங்கள். உங்களது சேமிப்புக் கணக்கிலிருந்தோ அல்லது உங்களுக்கு டைம்டெப்பாஸிட் கணக்கிருந்தால் அதிலிருந்தோ உங்களது அஞ்சலக ரெக்கரிங் டெப்பாஸிட்டிற்கு தேவையான பணத்தை மாற்றுமாறு, போஸ்ட்மாஸ்டருக்கு நிரந்தரமான உத்தரவு கொடுங்கள்.

*தேவையிருந்தால்*

கணக்குத் துவங்கி ஒரு வருடம் முடிந்த பின்னர் நிலுவையிலிருக்கும் பணத்தில், ஐம்பது சதவீதம் வரையில் ஒரு முறை எடுக்க அனுமதியுண்டு.

செலுத்தத் தவறிய தவணைகளை சிறியதொரு கட்டணத்துடன் செலுத்தலாம். பணம் கட்டாமல் நின்று போன கணக்கை மீண்டும் துவக்க வேறு வழிகளும் இருக்கின்றன.

*இவற்றைக் கவனியுங்கள்*

அஞ்சலக ரெக்கரிங் டெப்பாஸிட் கணக்கில் ரூ. 5, 10, 15 மற்றும் 20ஐ கட்டும், 15லிருந்து 53 வயதிற்கிடையிலானவர்களுக்கு ஒப்பற்ற உபரி பயன் ஒன்றும் உண்டு.

ஒரு சமூக பந்தோபஸ்து நடவடிக்கையாக, சிறு சேமிப்பாளர்களுக்கு, பிரிமியம் கட்டாமலேயே ஆயுள் இன்சூரன்ஸ் பயனை அளிக்கும் இந்த திட்டத்திற்கு, பாதுகாப்புக் கொண்ட சேமிப்புத் திட்டம் என்பது மறு பெயராகும்.

கணக்குத் துவங்கியவர் மரணமுறும் பட்சத்தில், வாரிசு அல்லது சட்டப்பூர்வமான வாரிசுக்கு கணக்கின் முதிர்வ மதிப்புத் தொகை கிடைக்கும். இதற்கு, 24 மாதங்கள் கணக்கில் பணம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும், என்ற ஒரு நிபந்தனை மட்டுமே உண்டு.

---

மேற்கொண்டு விவரங்களுக்கு தயவு செய்து கீழ்க்காணும் இடங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் :

* அருகிலுள்ள அஞ்சலகம் அல்லது
* மாவட்ட சேமிப்பு அதிகாரி, அல்லது
* உங்கள் மாநிலத்தின் சிறு சேமிப்பு டைரக்டரேட் அல்லது
* பிராந்திய அலுவலகம், தேசீய சிறு சேமிப்பு நிறுவனம் அல்லது

இந்த முகவரிக்கு எழுதுங்கள்:

**நேஷனல் சேவிங்ஸ் ஆர்கனைசேஷன்,**
12, ஸெமினரி ஹில்ஸ், நாக்பூர்-440006.

டி.ஏ.வி.பி. 80/286/427

# தன்னிறைவுத் திட்டச் சாதனைகள்



பி. ஏ. ஜெயவேலு
இணை இயக்குநர்
ஊரக வளர்ச்சி இயக்ககம்

ஊர்ப்புறங்களின் வளர்ச்சிக்கென செயல்படுத்தப்பட்ட சமுதாய நலத் திட்டமானது, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, ஊரகத் தொழில்களின் மேம்பாடு, ஊர்ப்புற மக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்துதல் போன்ற துறைகளில் நல்ல பலனளித்தது என்றாலும், பெருகிக்கொண்டு வருகின்ற மக்களின் தேவைகளைப் பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. இன்னும் பலஊர்ப்புறங்களில் குடிநீர் பற்றாக்குறை, பள்ளிகளுக்குச் சொந்தமாகச் சரியான கட்டடங்கள் இல்லாமை, போக்குவரத்துக்கான சாலைகள் இல்லாமை போன்ற நிலையினைக் காண்கிறோம். இத்தகைய குறைபாடுகளை நீக்கி ஊர்ப்புறங்களில் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தந்து பொருளாதார வளர்ச்சிக்கேற்றதொரு கட்டமைப்பினை ஒரு கால வரம்புக்குள் உருவாக்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பெற்று ஓராண்டுக் காலமாக அமலில் உள்ளதே தன்னிறைவுத் திட்டமாகும்.

கீழ்காணும் அடிப்படை வசதிகளை அமைத்துத் தருதல் தன்னிறைவுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.—

1. குடிநீர் வழங்குதல்;
2. இணைப்புச் சாலைகளை அமைத்தல், மேம்படுத்துதல்;
3. ஆதி திராவிடர் குடியிருப்புக்களுக்கு மயான சாலைகளை அமைத்தல்;
4. சிறுபாலங்களை அமைத்தல்;
5. சிறு பாசன அமைப்புகளை மேம்படுத்துதல்;
6. ஊர்ப்புற மருந்தகங்கள் அமைத்தல்;
7. தாய் சேய் நல விடுதிகள் அமைத்தல்;
8. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்;
9. ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதி அளித்தல்.

மேற்கூறிய பணிகளை நிறைவேற்ற நிதி வசதி போன்ற மற்ற சில வசதிகளைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தினைப் பின்வருமாறு மூன்று கட்டங்களாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது:

முதற் கட்டம் : 1980-81 ஆண்டு—69 ஒன்றியங்களில்.

இரண்டாம் கட்டம் : 1981-82 ஆண்டு—150 ஒன்றியங்களில்.

மூன்றாம் கட்டம் : 1982-83 ஆண்டு—எஞ்சிய 157 ஒன்றியங்களில்.


69 ஒன்றியங்களில் முதற்கட்டப் பணி வெற்றிகரமாகத் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

குடிநீர் வசதி :—தற்போது அநேக குடியிருப்புகளில் குடிதண்ணீருக்காக வெகு தூரம் சென்று பெறவேண்டியுள்ளது. இவ்விடர்ப்பாட்டினை அறவே நீக்கும் பொருட்டு ஒவ்வொரு குடியிருப்புக்கும் அருகாமையிலேயே குடிநீர் வசதி செய்து தர பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணி தமிழ்நாடு குடிநீர் வசதி வடிகால் வாரியத்தின் பொறுப்பில் உள்ளது. இவ்வறுபத்தொன்பது ஒன்றியங்களில் சுமார் 2945 குடியிருப்புகளுக்கு 21·00 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி





ஊர் வளர்ச்சிக்கு ஒரு முனைப்புச் சக்தி

"தாரா"
உங்களை
அழைக்கின்றது...



நூறு சதவிகித
வருமான வரிச்சலுகை



ஊரக வளர்ச்சிப் பணி
மேற்கொண்டால்

வருமானவரி நிர்வாகத்தால்
அங்கீகரிக்கப்பட்ட பதிவுச் சங்கம்
(எண்: 205/35சிசி/35சிசிஎ/80-23
தேதி 31.10.80)

**தமிழ்நாடு ஊரகச்**
**சீரமைப்புச் சங்கம்,**
(பதிவு எண்: 30/80,
நான்காவது மாடி,
குறளகம், சென்னை 600 001.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

முதன்மை நிர்வாக அலுவலர்
"தாரா"
தொலைபேசி எண் : 20901

ARIES/DIPR/468 TAM

ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டு, அவைகளில் சுமார் 1334 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளிலும் மிக விரைவில் இவ்வசதி செய்து தரப்படும்.

**இணைப்புச் சாலைகள் :—** ஊர்ப்புறங்களிலுள்ள அநேக சாலைகள் எந்தவொரு வாகனமும் செல்ல உகந்ததாக இல்லை. பொது வழியிலிருந்து இணையாக வளைந்து வளைந்து, வரப்புகள் மற்றும் கால்வாய்களினூடே நடந்து நடந்து உருவான ஒற்றையடிப் பாதைகளே உள்ளன. நல்ல இணைப்புச் சாலைகளை தேவையான இடங்களில் அமைக்கவும்; தற்போதுள்ள இணைப்புச் சாலைகளை அனைத்துப் வங்களிலும் பயன்படுமாறு மேம்படுத்தவும் இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்கட் தொகை 500வரை உள்ள குடியிருப்புகளுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை செலவு செய்து முரம்பு பரப்பிய சாலைகளையும் 500 முதல் 1,500 வரை மக்கட்தொகையுள்ள குடியிருப்புகளுக்கு ரூ. 40,000 முதல் ரூ. 50,000 வரை செலவு செய்து சரளைக்கல் சாலைகளையும் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்ட 69 ஒன்றியங்களில் மொத்தம் 1221 இலட்சம் ரூபாய் செலவில் 4220 கிலோ மீட்டருக்கு இணைப்புச் சாலைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 3138.2 : கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குச் சுமார் 143.00 இலட்ச ரூபாய் செலவில் 950 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் அமைக்கும் திட்டத்தில் 412.6 கிலோ மீட்டர் நீளத்திற்கு இப்பணி முடிந்துள்ளது.

**சிறு பாலங்கள் அமைத்தல் :—** இணைப்புச் சாலைகளை அமைக்கும் போது குறுக்கிடும் வடிகால்களைக் கடப்பதற்காக ரூ. 138 இலட்ச ரூபாய் செலவில் 4150 சிறு பாலங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1248 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**சிறுநீர்ப் பாசன அமைப்புகளை மேம்படுத்துதல் :—** சுமார் 1000 ஏக்கர் பரப்பிற்கு குறைவான நிலங்களுக்கு நீர் வழங்கக்கூடிய சுமார் 683 சிறு நீர்ப்பாசன குளங்களை மேம்படுத்த 23.00 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## திரு ஜீவானந்தம் குடும்பத்துக்கு ஓய்வு ஊதியம்!

மறைந்த பொதுவுடைமைக் கட்சித் தலைவர் ப. ஜீவானந்தம் அவர்கள் குடும்பத்துக்குத் தமிழ்நாடு அரசு மாதம் ரூ. 500 ஓய்வு ஊதியம் கொடுக்கிறது.

மறைந்த ப. ஜீவானந்தம் அவர்கள் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் ஆற்றி உள்ள தியாகத்தினையும், தொண்டினையும் பாராட்டி, அவரது மனைவி திருமதி பத்மாவதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 ஓய்வு ஊதியம் வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஓய்வு ஊதியம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்படும்.

திரு ஜீவானந்தம் அவர்களின் குழந்தைகளுக்கு அரசுப் பணியில் தகுதிக்கு ஏற்ப விசேட உரிமையும், முன்னுரிமையும் கொடுக்கப்படும்.

அவரது மனைவிக்கு அரசு மருத்துவ மனைகளில் அமைச்சர்களுக்கு அளிப்பது போல மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

திரு ஜீவானந்தம் அவர்களின் குடும்பத்தார் வேறு கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பினாலும் அவையும் பரிவுடன் பரிசீலிக்கப்படும்.

திரு ஜீவானந்தம் அவர்களின் பிறந்த நாளான 21.8.81ல் நாகர்கோவிலில் அவரின் முழு உருவச்சிலை ஒன்றை திறந்து வைக்கவும் தமிழக அரசு முடிவு செய்து இருக்கிறது.

**ஊர்ப்புற மருந்தகங்கள் மற்றும் தாய் சேய் நல விடுதிகளை அமைத்தல் :—** இவை தற்போது பெரும்பாலான ஊர்ப் புறங்களில் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் நல்ல கட்டிடங்களை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்டத்தில் 71 மருந்தகங்கள் மற்றும் 228 தாய் சேய் நல விடுதிகளுக்காக கட்டிடங்களை அமைக்கும் பணி 119.40 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 3 மருந்தக கட்டடங்களும், 2 தாய்சேய் நலக் கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது எஞ்சியுள்ளவை விரைவில் கட்டி முடிக்கப்படவுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள் :—** நாட்டிலுள்ள 23,257 தொடக்க மற்றும் உயர் தொடக்க பள்ளிகளில் 2,572 பள்ளிகள் வாடகைக் கட்டடங்களிலும், தற்காலிகக் கட்டடங்களிலும் அமைந்துள்ளன. முதற்கட்டத்தில், 69 ஒன்றியங்களில் 1364 பள்ளிகளுக்கான கட்டடங்கள் சுமார் 545 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவைகளில் 128 பூர்த்தியடைந்துள்ளன. எஞ்சியவை விரைவில் முடிக்கப்பெறும்.

**ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல் :—** நம் நாட்டில் தற்போது 1,07,338 ஆதி திராவிடர் குடும்பங்கள் சொந்த வீடின்றி சிறு குடிசைகளில் வாழ்கின்றனர். முதற்கட்டத்திலுள்ள 69 ஒன்றியங்களில் 7,000 குடும்பங்களுக்கு 252 இலட்ச ரூபாய் செலவில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவைகளில் 5418 வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இம்மாபெரும் திட்டத்தினை நிறைவேற்றுவதில் ஊராட்சி ஒன்றியங்கள் மிக முக்கிய இடத்தினை வகித்து செயலாற்றுகின்றன. ஏறத்தாழ ஒவ்வொரு ஒன்றியமும் 60 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பணிகளை ஏற்று நிறைவேற்றுகின்றன. இவை, சாதாரணமாக ஒன்றியங்கள் நிறைவேற்றும் பணிகளைப்போல் ஆறு முதல் பத்து மடங்காகும். எனவே, வேலை பளு மிகைவாலும், திட்டத்திற்கான அடிப்படைக் கட்டுமான பொருள்களான எஃகு, சிமெண்ட், சரளைக்கற்கள் ஆகியவை தேவையான அளவுக்கு உரிய நேரத்தில் கிடைக்காததாலும் திட்டச் சாதனையை 100 சதவீதம் அடைய இயலவில்லை. எனினும் இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில் மேற்கொள்ளும்போது இவ்விடுக்கண்கள் களையப்பெற்று நல்ல சாதனை ஏற்படுத்த முடியும்.

# அக்மார்க் லேபிள்

பொட்டலங்களிலுள்ள பொருட்களின் பரிசுத்தம் மற்றும் தரத்திற்கு, இந்திய அரசளிக்கும் உத்திரவாதமாகும்.

## நம்பிக்கையுடன் வாங்குங்கள்
## அக்மார்க்கை நம்புங்கள்

நெய், வெண்ணெய், உணவெண்ணெய்கள், தேன், பருப்புக்கள், மசாலாப்பொடிகள், போன்றவற்றுக்கு, அனைத்து வசதிகளும் கொண்ட ஆராய்ச்சி சாலைகளில், விரிவாக பரிசோதிக்கப்பட்ட பின்னரே அக்மார்க் லேபிளளிக்கப்படுகிறது.

எப்போதும் "அக்மார்க்" உள்ள பொருட்களையே வாங்குங்கள்!

## இவை சுத்தத்திற்காகவும்
## தரத்திற்காகவும் பரிசோதிக்கப்பட்டவை

இந்த லேபிளுடைய பொருட்கள்
மளிகைக் கடைகளிலும் ஜெனரல் ஸ்டோர்களிலும்
எளிதில் கிடைக்கும்.

DAVP 80/506

# தமிழகத்தில் வறட்சி நிவாரண நடவடிக்கைகள்

[மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வருவாய்த்துறை மானியத்துக்கு 9.4.81 அன்று சட்டமன்றப் பேரவையில் அளித்த பதில் உரையிலிருந்து தொகுக்கப்பட்ட முக்கிய விவரங்கள்]



| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| வறட்சி நிவாரணப் பணிகளுக்காக, இதுவரையில், ஒதுக்கப்பட்டுள்ள தொகை | 2,817.05 |

ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை, பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளின் விவரங்களும், தொகை விவரங்களும்....

குடிநீர் விநியோகப் பணிகள்:

| | | | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (அ) | புதிய குழாய்க் கிணறுகள், கிணறுகள் அமைக்க | 372.12 | |
| (ஆ) | கிணறுகளை ஆழப்படுத்த | 235.32 | |
| (இ) | நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டங்களின் மேம்பாட்டுக்கு | 87.61 | 695.05 |
| (ஈ) | ஏரிகளின் உள்பக்கம் கிணறுகள் அமைக்க | 100.00 | |
| (உ) | லாரிகள், வண்டிகள், ஆட்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு | 50.00 | |
| (ஊ) | நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் நீரேற்றுச் சாதனங்களுக்கு, தனி, மின் சப்ளைக் கம்பிகள் அமைப்பதற்கு | 50.00 | |
| (எ) | தண்ணீர் டாங்கிகள் செய்வதற்கு | 20.00 | 220.00 |
| | | | 915.05 |
| (ஏ) | மேலும் புதிய குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கு | 390.00 | |
| (ஐ) | மதுரை மாநகராட்சிக் குடிநீர்த் திட்ட மேம்பாட்டுக்கு, மேலும், 50 குழாய்க் கிணறுகள் அமைக்க | 10.00 | 400.00 |
| | மொத்தம் ரூ | | 1,315.05 |

## வேலை வாய்ப்புத் திட்டங்கள்:

| ஊராட்சி ஒன்றியங்கள் மூலம்: | | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| அ. | 50 ஏக்கர் வரை பாசன வசதி அளிக்கும் ஏரிகளை மராமத்து செய்வதற்கு | 106.00 |
| ஆ. | மண் சாலைகள் அமைக்க | 156.00 |
| இ. | ஊருணிகள் பழுதுபார்த்துச் சுத்தம் செய்ய | 31.00 |
| ஈ. | நீர் சேகரிப்புக் குட்டைகள் அமைக்க | 7.00 |

## பொதுப்பணித் துறை மூலம்:

| | | |
|---|---|---|
| உ. | பெரிய ஏரிகள் மராமத்து செய்ய | 950.00 |
| ஊ. | வைக்கோல் விநியோகம் | 20.00 |
| எ. | எண்ணெய் வித்துக்கள் கொள்முதல் செய்து, பாதுகாத்து விநியோகிக்க | 32.00 |

## நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறைமூலம்:

| | | |
|---|---|---|
| ஏ. | நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை மூலம், வேலை வாய்ப்புத் தரக்கூடிய வகையில் சாலைகளைச் செப்பனிடுவதற்கு | 200.00 |
| | ஆக மொத்தம் ரூபாய் | 2,817.05 |

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| அ) குடிநீர்த் திட்டங்கள் | 1,315.05 |
| ஆ) வேலை வாய்ப்புத் திட்டங்கள் | 1,502.00 |
| மொத்த ரூபாய் | 2,817.05 |

**கைப்பம்புகள்**

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 50 அடிக்கு மேல் ஆழமுள்ள குழாய் கிணறுகளில் உள்ள கைப்பம்புகள்

| | |
|---|---|
| 1. தற்போது இயங்கும் நிலையில் உள்ளவை | 21,670 |
| 2. பழுதாக உள்ளவை. | 347 |
| 3. கைவிடப்பட்டவை. | 144 |
| மொத்தம் | 22,161 |

**ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் உள்ள கைப்பம்புகள்**

| | |
|---|---|
| 1. தற்போது இயங்கும் நிலையில் உள்ளவை | 11,989 |
| 2. பழுதுபட்டவை | 721 |
| 3 கைவிடப்பட்டவை | 208 |
| மொத்தம் | 12,918 |

**மேல்நிலைத் தொட்டிகள்**

**மின்விசை பம்புகள் விவரம்-11,022**

| | |
|---|---|
| தற்போது இயங்கும் நிலையில் உள்ளவை | 10,440 |
| பழுதான நிலையில் உள்ளவை | 504 |
| போர் மண் அடைத்து கைவிடப்பட்டவை | 72 |
| மின்விசை III ம் பிரிவுக்கு மாற்றப்படுபவை(III Phase) | 6 |
| | 11,022 |

**பழுது பார்க்கும் பணியின் முன்னேற்றம்**

| | |
|---|---|
| 31.3.81 வரை பழுது பார்க்கப்பட வேண்டியவை | 1,268 |
| பழுது பார்க்கப்பட்டவை | 817 |
| இன்னும் பழுது பார்க்கப்பட வேண்டியவை (1.4.81) | 451 |

## கிராம அதிகாரிகள்

பகுதி நேர கிராம அதிகாரிகள் திட்டத்தை மாற்றி, கிராம நிர்வாகத்தின் பொறுப்புக்கு, முழு நேர கிராம அதிகாரிகள் நியமிக்கும் முறையை, நிர்வாக அவசியத்தை முன்னிட்டு, தமிழ் நாட்டில் இருந்த பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவிகள் அனைத்தும், அவசரச் சட்டத்தின் மூலம், 14-11-1980 முதல் நீக்கப்பட்டன.

முழு நேர கிராம அதிகாரிகள் நியமிக்கப்படும் பணி தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிதாக கிராம நிர்வாக அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்ட பின்னர் அவர்கள் பணியில் சேர்ந்த 1 ஆண்டுக்குள், 1 மாதக் காலத்திற்கு, நில அளவைப் பயிற்சி வழங்கப்படும். இதற்காக—

1. 100 பயிற்சிப் பள்ளிகளும்,
2. ரூ. 4.50 இலட்சம் செலவில் பணியாளர்களும்,
3. ரூ. 2.61 இலட்சம் செலவில் கருவிகள் வாங்கவும்,

ஆக மொத்தமாக ரூபாய் 10.31 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுமாராக 2,500 ஆதிதிராவிடர்கள், கிராம அலுவலர்களாக நியமிக்கப்பட உள்ளார்கள்.

**நிலை நீர்த் தொட்டிகள்**

ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து புதிதாக குடிநீர் வடிகால் வாரியம் பொறுப்பேற்கும் நிலைநீர்த் தொட்டிகள் -பம்புகள் விவரம்:

| | |
|---|---|
| பொறுப்பு ஏற்க வேண்டிய மொத்த பம்புகள் | 1,459 |
| மார்ச் மாதம் வரை பொறுப்பு ஏற்றவை | 1,208 |
| இன்னும் பொறுப்பு ஏற்கப்பட வேண்டியவை | 251 |

**புதிய குழாய்க் கிணறுகள்**

| | |
|---|---|
| குழாய்க் கிணறுகள் அமைக்க எடுத்துக்கொண்ட எண்ணிக்கை | 2,596 |
| 31.3.1981-க்குள் முடிந்தவை | 1,209 |
| வேலை நடைபெற்று வருவது | 1,387 |

மேலும் 9,000 குழாய்க் கிணறுகளை வரும் மாதங்களில் தேவைக்கேற்ப அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## கிணறுகள் ஆழப்படுத்துதல்

| | | |
|---|---|---|
| 1. | மாநிலம் பூராவும் ஆழப் படுத்தப்பட வேண்டிய கிணறுகள் | 10,688 |
| 2. | 31.3.81 முடிய ஆழப்படுத்த பட்ட கிணறுகளின் எண்ணிக்கை | 1,076 |
| 3. | வேலை நடைபெற்றுவருபவை | 2,445 |
| 4. | வேலை எடுத்துக்கொள்ள இருப்பவை | 7,167 |
| 5. | இதனால் வேலை வாய்ப்பு பெறுவோர் (மனித நாட்கள்) | 98,000 பேர்கள். |

## மாட்டுத் தீவனத்திற்கு முன்னேற்பாடாக செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

வறட்சியால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள வட ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் கால்நடைத் தீவனத் தட்டுப்பாட்டுக்கு நிவாரணமாக ரூ. 20 இலட்சம் அளவில் வைக்கோலை அரசு பண்ணைகளிலிருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும் வாங்கி விநியோகிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கால்நடைத்துறையின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## விதைபொருள் வாங்கி சேமித்துவைப்பதற்கு செய்யப்பட்ட நடவடிக்கைகள்

வேர்க்கடலை போன்ற எண்ணைய்வித்துப் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பின்னால் விதைப்பதற்குத் தேவையான வித்துக்கள் கிடைப்பதற்கு முன்னேற்பாடாக ஓரளவு கிடைக்கக்கூடிய வித்துக்களை வாங்கி சேமித்து வைத்து தக்க சமயத்தில் வறட்சிப் பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்கும், மார்ஜினல் விவசாயிகளுக்கும் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, 500 டன் வேர்க்கடலையை இவ்விதம் வாங்கி சேமித்து வைக்க ரூ 32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோல நெல்விதை சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நிலவரிச் சலுகை

கண்டு முதல் (விளைச்சல்) 50 சதவீதத்திற்கு குறைவாக விளைந்தால்,

1. நிலவரி,
2. உள்ளூர் வரி,
3. தண்ணீர்த் தீர்வை,
4. தனித்தண்ணீர்த் தீர்வை
5. பணப்பயிர் தீர்வை

தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஒருவருக்கு உள்ள நிலங்களில் பாதிக்கு மேல் உள்ள நிலங்களுக்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட காரணத்தால் அரசு தீர்வைகள், கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டால், விளைந்துள்ள நிலங்களுக்கு கூட தண்ணீர்த் தீர்வை அரசு கடன்கள் முதலியவை அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்படும்.

இதனால் அரசுக்கு சுமாராக 8 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும்.

## நிவாரணப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பு

நிவாரணப் பணிகள் செம்மையாகவும் துரிதமாகவும் நடைபெறுவதற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் முழுப் பொறுப்பு ஏற்பார்கள்.

## வட்ட குழுக்கள், மாவட்ட குழுக்கள் மாநில உயர்மட்டக் குழு

### (அ) வட்டக்குழு:

பெருமளவில் நடைபெறவேண்டிய, இந்த நிவாரணப் பணிகளில், பொதுமக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு, தங்கள் கருத்துக்களையும், அறிவுரைகளையும் வழங்கும் வகையில், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும், பொது மக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு வட்ட குழுவும்—

### (ஆ) மாவட்டக் குழு:

அதேபோன்று, மாவட்ட அளவில், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மாவட்ட குழுவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளது.

## பயிரிடும் குத்தகைதாரர்கள்

பயிரிடும் குத்தகைதாரர்களுடைய நன்மையைக் கருதி, இவர்களுடைய, நீண்ட கால வேண்டுகோளான 25:75 சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது, மாண்புமிகு எம். ஜி. ஆர். தலைமையிலான தமிழக அரசு தான்.

இயற்கை இடர்ப்பாடு வருகிறபொழுது ஏற்படுகிற நஷ்டத்தினால், குத்தகைதாரர்கள் "வாரம்" கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். அவர்களுடைய கஷ்டத்தை நீக்குகின்ற வகையில், அவர்களது குத்தகை பாக்கியைத் தள்ளுபடி செய்து சட்டத்தை நிறைவேற்றியது.

இதனால், சுமார் 30 கோடி ரூபாய் அளவுக்கு ஏழைக் குத்தகை விவசாயிகள் பயன் அடைந்தார்கள்.

மீதி உள்ள குத்தகை பாக்கிகளை ஒரே தவணையில் பூராவும் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும் என்பதைக் கருதி, மூன்று தவணைகளில் செலுத்த இந்த அரசு, வழிவகை செய்தது.

**(இ) மாநில உயர்மட்டக் குழு:**

மாநில அளவில், வறட்சி நிவாரணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குத் துரித மாக முடிவுகள் எடுப்பதற்கும், வறட்சி நிவா ரணப் பணியில், பல்வேறு துறைகளை ஒருங் கிணைந்து செயல்படுத்தவும், தலைமைச் செயலாளர் தலைமையில், ஒரு உயர்மட்டக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

### மத்திய அரசின் உதவி

தமிழ்நர்ட்டில் நிலவும் வறட்சி நிலை பற்றி, மத்திய அரசின் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்கு, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி, குடி தண்ணீர்க்குழாய் கிணறுகளை அமைப்பதற் காக, துளை போடும் கருவிகள் தேவையை எடுத்துரைத்து, 100 துளை போடும் கருவி களை, தமிழ்நாட்டிற்கு, ஒதுக்கும்படி வேண்டு கோள் கொடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்தியப்பிரதமருக்குக் கடிதம் எழுதி, மத்திய அரசு, இம்மாநிலத்திற்குப் பெருமளவில் எல்லாவித உதவிகளும் அளிக் கும்படி வேண்டுகோள் கொடுக்கப்பட்டுள்ளது.

### மத்திய அரசின் ஆயவுககுழு

மத்திய அரசின் ஆய்வுக்குழு வறட்சி யால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், நிவா ரணப்பணிகளையும் ஏப்ரல் 1 முதல் 4 தேதி களில் நேரில் பார்த்து சென்றுள்ளனர். கணிச மான அளவு மத்திய அரசின் உதவி கிடைக் கும் என நம்பப்படுகிறது.

## வருவாய் சரகம் (Revenue Firka)

பல ஆண்டுகளாக வருவாய்ச் சரகத்தைப்
பற்றி எவ்விதச் சீர்திருத்தமும் செய்யப்படாமல்
இருந்தது.
சில வருவாயச சரகங்களில் 15 கிராமங்
களிலிருந்து 40 கிராமங்கள் வரை இருந்தன.
சில வருவாய்ச் சரகம் பெரிதாகவும், சில
சிறிதாகவும் இருந்தன.
இதனால் வருவாய் ஆய்வாளர்கள்
(Revenue Inspector) மக்களுடைய தேவைகளை
நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்தார்கள்.

வருவாய் ஆய்வாளர்களுக்கு ஏறக்குறைய
37 வகையான பணிகள் இருந்தன.

ஆனால், வருவாய் வாரியம் ஏற்பட்ட
திலிருந்து அவர்களுக்கெனறு அலுவலகம்
இல்லை.

இப்படி 37 பொறுப்புகள் உள்ள வருவாய்
ஆய்வாளர்களுக்கு அலுவலகம் இல்லாத
காரணத்தால், அவர்களுடைய பணிகளை ஒழுங்
காகச் செய்ய முடியவில்லை.

பொதுமக்களும், வருவாய் ஆய்வாளர்
களும் செய்து முடிக்க வேண்டிய காரியங்களுக்கு
வருவாய் வட்டாட்சியர் இடத்திற்கோ அல்லது
வருவாய் கோட்டாட்சியர் இடத்திற்கோ சென்று
கொண்டு இருந்தார்கள்.

இவைகள் திறமையாக நடைபெற வேண்
டும் என்பதற்காக, மக்களுடைய குறைகள்
விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக
வருவாய்ச் சரகங்கள் அதிகமாக்கப்பட்டது.

முதலில் 774 சரகங்கள் இருந்தன. இன்
றைக்கு 1,097 சரகங்கள் உள்ளன.

இதுவரையிலும் வருவாய்ச் சரக
அலுவலகம் இணைந்த வருவாய் ஆய்வாளர்
குடியிருப்புகள் 358 கட்டப்பட்டுள்ளன.

## பட்டாப்புத்தகத் திட்டம்

பட்டா பாஸ் புத்தகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில், பல குறைபாடுகள் இருந் தன.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து, குறை பாடுகளைப் போக்குவதற்கான பரிந்துரை களை அரசுக்கு வழங்க, வருவாய் ஆணையர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, தனது அறிக்கையை, 1979-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அளித்தது.


அந்த அறிக்கைக்கு ஏற்ப, 1979-ஆம் ஆண்டு, மே மாதத்தில், பட்டா புத்தகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட, அரசு ஆணைகள் பிறப்பித்தது.

நிலம் உள்ளவர் ஒவ்வொருவருக்கும், அவருடைய சொத்தின் சட்ட ரீதியான அடிப் படையாக, இந்தப் பட்டா புத்தகம் அமைய வேண்டும் என்பதுதான், முக்கியமான கருத்து.

அந்த அடிப்படையில், நிலம் உள்ளவர் களுக்கு, அவர்களுடைய விவசாயத் தேவைக் கான கடன் உதவி வழங்கும் வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் பட்டா புத்தகத்தை வைத்துக் கொண்டு கடன் வழங்கும் ஒரு முறையை உருவாக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம்.

அவ்வாறு செய்ய வேண்டுமென்றால், பட்டா புத்தகத்திற்கு, சட்ட ரீதியான அந் தஸ்து வழங்க வேண்டியுள்ளது. விரைவில், இதற்காக, ஒரு சட்ட முன் வடிவு, சட்டப் பேரவையில் அறிமுகம் செய்ய எல்லா நட வடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

இந்தப் பட்டா புத்தகத் திட்டத்தின் மூலம், நிலத்தை ஒருவர் விற்க வேண்டுமென் றால், பட்டா புத்தகத்தைக் காண்பித்தால் தான் விற்க முடியும்.



# திருச்சி மாவட்டத்தில்

# தன்னிறைவுத் திட்டம்!

இதுவரையில், தமிழ் நாட்டில் மாநிலம் முழுவதற்குமாகத் திட்டப்படும் திட்டங்களுக்கு உட்பட்டே கிராமங்களிலும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. இதனால், கிராமங்களாகட்டும், கிராம மக்களாகட்டும் பரிபூரணமாகப் பயன்பெற இயலாத நிலைமை இருந்து வந்தது. அரசு மூலம், கிராமங்களுக்காகத் தீட்டப்படும் திட்டங்களின் பலன் கிராமங்களை அப்படியே முழுவதுமாகப் போய் அடைய முடியாத நிலை இருப்பதாகக்கூட பேசப்பட்டது.

எனவே, மிகச் சாதாரண மக்களும் அரசின் திட்டப் பலனை அனுபவத்திடவேண்டும் என்கிற நோக்கத்தில், ஆன்றவிந்தடங்கிய கொள்கை அரசுச் சான்றோரால் நுணுக்கமாக ஆராய்ந்து வகுக்கப்பட்ட திட்டம்தான் தன்னிறைவுத் திட்டமாகும்.

தமிழகத்தின் மைய மாவட்டமான திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள—உப்பிலியபுரம், கரூர், பரமத்தி, ஆலத்தூர், ஜெயங்கொண்டம், வேப்பூர் ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்கள் 1979-80-க்கான முதற் கட்டத் தன்னிறைவுத்திட்ட நிறைவேற்றத்திற்கான வட்டாரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இந்தப் பணிகளுக்கெனத் திருச்சி மாவட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 5.37 கோடி ஆகும்.

இம்மாவட்டத்தில், இரண்டாவது கட்டமாகத் தன்னிறைவுத் திட்டம் நடப்பு நிதியாண்டில்—மணப்பாறை, மணிகண்டம், அரவக்குறிச்சி, தான்தோனி , தாத்தையங்கார் பேட்டை, துறையூர் பெரம்பலூர், ஆண்டிமடம், அரியலூர், புள்ளம்பாடி ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

இதுவரையில் கிராமப்புறப் பணிகளுக்குக் குறைவான நிதி ஆதாரங்களே ஏற்படுத்தப்பட்டு, அவற்றுக்கு உட்பட்டே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் இருந்து வந்தது. தன்னிறைவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டவுடன் இந்நிலை முழுமையாக மாறிவிட்டது. மக்களுக்குத் தேவையான பணிகள் பற்றி அறிந்து, திட்டம் வகுக்கப்பட்டு, அதற்குத் தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனவே, அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் வரைக்கு உட்பட்டே பணிகள் மேற்கொள்ளப்படும்போதுதான் கிராமங்களின் தேவைகள் நிறைவு பெறும். சாதாரண மக்களின் நெஞ்சிலும் நீக்கமற மகிழ்ச்சி தேங்கும்.

பி.எல்.ஆர்

இவ்வகையில் மக்களுக்குத் தேவையானஅடிப்படை வசதிகள் அமைப்பதற்கான பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுவதற்குத் தேவையான அளவு நிதி ஒதுக்கீடு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிடைக்கிறது.


இத்திட்டத்தின் முதற்கட்டமாகத் திருச்சியில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் எவ்வாறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதைக் காண நேரில் சென்றிருந்தோம்.

திருச்சி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து ஊராட்சி ஒன்றியங்களிலுமாக ரூ. 5 கோடியே 37 இலட்சம் செலவில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 48 பணிகள் சிறப்புற நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

## ஆலத்தூர் கேட்

திருச்சியிலிருந்து 45 கி.மீ. தூரத்திலுள்ள ஆலத்தூர் கேட் ஊராட்சி ஒன்றியத்தில், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளைப் பார்வையிடச்செல்கிறோம் நாம். வட்டார வளர்ச்சி அலுவலர் திரு ஜே. ராஜகோபாலன் நம்மை இன்முகத்தோடு வரவேற்று தனது ஒன்றியத்தில் நடைபெற்றுள்ள பணிகள் பற்றி விளக்குகிறார்.

பெரம்பலூர் வட்டத்தைச் சேர்ந்த இந்த ஒன்றியத்தின்



ஊராட்சி மன்றங்கள் 39 ஆகும். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த வட்டாரத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மொத்தப் பணிகளின் எண்ணிக்கை 333.

இத் திட்டங்களைக் கிராம மக்கள் நலன் கருதி, நிறைவேற்றிட ஆன செலவுத் தொகை எவ்வளவு தெரியுமா? ரூ. 49,67,246 ஆகும்.

ஒன்றியம் முழுவதும் அதிகாரிகளோடு சுற்றி, நிறைவேற்றப்பட்டிருக்கும் ஆக்கப்பணிகளைப் பார்வையிடுகிறோம் நாம்.

15.4 கி.மீ. தூரத்திற்குக் கப்பியில் இணைப்புச் சாலையும் 150.2 கி.மீ. தூரத்திற்கு செங்கப்பிச்சாலையும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த வட்டாரத்தில் போடப்பட்டுள்ளன.

43 குடிநீர்த் திட்டங்கள், 77 இணைப்புச் சாலைகள், 47 சிறு பாலங்கள், 15 சறுக்கைகள், 2 கிராம மருந்தகங்கள், 4 தாய் சேய் நல விடுதிகள், 22 பள்ளிக் கட்டடங்கள், ஒரு சமூகக்கூடம், 2 மகளிர் கழிப்பிடங்கள், ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்கு 15 சாலைகள், சிறு பாசனத் திட்டங்கள் 104 ஆகியவை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த வட்டாரத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கொளக்காநத்தம் பகுதியைப் பார்த்து விட்டுப் புறப்படுகையில் ஊர்ப் பெரியவரும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான திரு என். நாராயணசாமியைச் சந்தித்துப் பேசினோம்.—''இப்போது போலவே தொடர்ந்து நல்லபடி நிறைவேற்றப்படுமானால், இந்தத் தன்னிறைவுத் திட்டத்திற்கு நிகரே இல்லை. கிராம மக்கள் இத்திட்டத்தின் மூலம் பெரும் பலனைப் பெற முடியும்'' என்றார் அவர்.

ஐயனாபுரம், சாத்தனூர், அனப்பாடி, விஜயகோபாலபுரம் ஆகிய கிராமங்களிலெல்லாம் நிறைவேற்றப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டப்பணிகள் நம்மால் பார்வையிடப்படுகின்றன.

## க. பரமத்தி

கரூர் பரமத்தி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டங்கள் பற்றி நம்மிடம் பெருமிதத்தோடு விவரித்தார் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு கே. இஷ்டலிங்கம்.

30 ஊராட்சி மன்றங்கள் இந்த வட்டாரத்திற்குள் அடங்கியுள்ளன ஆனாலும், ஒதுக்கப்பட்ட பணத்தில் பரவலாக 214 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

க. பரமத்தியில் 50 ஆயிரம் ரூபாயில் கட்டப்பட்டுள்ள கிராம மருந்தகத்தை நாம் பார்வையிடுகிறோம். இதன் மூலம் க.பரமத்தி, நெடுங்கூர், முன்னூர், அரியூர், நாதந்தை, குப்பம்ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 13,655 மக்கட் தொகையினர் பெரும்பயனடைவார்கள்.

அதே ஊரில், 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்

---

**திருச்சி மாவட்டத்தில்**

**1980-81** ஆம் ஆண்டு, தன்னிறைவுத்திட்டத்தின் முதற்கட்டமாகத் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை: 1357

குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள் : 125

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஆன குடிநீர் வினியோகப் பணிகள் : 203

மொத்தம் 724.5 கி. மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள்: 472

பள்ளிக் கட்டடங்கள் : 107

மொத்தம் 27.20. கி. மீ. நீளத்தில், ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து அமைக்கப்பட்ட மயான சாலைகள் : 27

சிறு பால வேலைகள் : 236

சிறு பாசன வேலைகள் : 277

கட்டப்பட்ட தாய்சேய் நல விடுதிகள் : 26

கிராம மருந்தகக் கட்டிடங்கள் : 9

இந்தத் தன்னிறைவுத் திட்டப்பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 5 கோடியே 37 இலட்சம்.



டுள்ள தாய்சேய் நல விடுதிமூலம் 2.276 பேர் பயனடைவர்.

பரமத்தி காளிபாளையத்தில் ரூ 50 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடம் பற்றி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் திரு டி. கே. பெரியதம்பியைக் கேட்டபோது- ''மிகவும் உன்னதமான காரியம். கூடிய சீக்கிரம் இந்தப் பகுதியிலும் உயர் நிலைப் பள்ளிக்கூடமும் வர அரசு உதவவேண்டும்'' என்று என்று நன்றிப் பெருக்கோடும் நம்பிக்கையோடும் தெரிவித்தார்.

அதே பகுதியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பார்த்து விட்டு- தென்னிலை மேற்குப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்றக் கட்டடத்தைப் பார்த்தோம்.

''இதற்கு முன்னால் ஊராட்சி மன்றம் எங்கே கூடிக்கொண்டிருந்தது?'' என்ற நம் கேள்விக்கு- ''முன்பிருந்த ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டிலேயே கூடிக் கொண்டிருந்தது. ரூ. 4மட்டுமே அப்போது அதற்கு வாடகையாகத் தரப்பட்டது'' என்று கூறினார்கள் உடன்வந்த அதிகாரிகள்.

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் ,தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகள் 110, சிறுபாலங்கள் 50, ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்கான சாலைகள் 5, கிராம மருந்தகங்கள் 3, தாய்சேய் நல விடுதிகள் 6, பள்ளிக் கட்டடங்கள் 20, சிறுபாசனத் திட்டங்கள் 21, ஆசிரியர் குடியிருப்பு 1, மகளிர் கழிப்பிடங்கள் 2 ஆகியவை குறித்தகாலத்திலேயே சிறப்பாகக் கட்டிமுடிக்கப் பட்டுள்ளன.

வட்டார மக்கள் இந்தப் பணிகளை வானளாவப் புகழ்கிறார்கள்.

## உப்பிலியபுரம்

உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் முக்கியக் கிராமங்கள் சிலவற்றில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் முழுநிறைவு பெற்றிருப்பதை வட்டார வளர்ச்சி அலுவலரும், கோட்ட வளர்ச்சி அலுவலரும் அழைத்துச் சென்று காட்டினர்.

இணைப்புச் சாலைகள் 29, சிறுபாலங்கள் 48, ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயான சாலைகள் 3, சிறு பாசனத்திட்டங்கள் 5, கிராம மருந்தகங்கள் 3, தாய்சேய் நல விடுதிகள்5, பள்ளிக் கட்டடங்கள் 24, சிறு பாசனத் திட்டங்கள் 30,இதர வேலைகள் 7 என 154 பணிகள் மொத்தத்தில் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இந்தச் சீரிய திட்டங்களை நிறைவேற்றிட செலவிடப்பட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 39 இலட்சத்து 98 ஆயிரத்து 660 ஆகும்.

ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டமும் இந்த ஒன்றியத்தில் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. தளிகை முருங்கைப்பட்டி என்ற கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் குடியிருப்பில் 19 வீடுகள் இந்தத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டு சிமெண்ட் பூச்சுக்காகக் காத்திருப்பதை நாம் கண்டோம்

இத் திட்டத்தின்படி, ஒரு வீட்டுக்கு மூவாயிரம் ரூபாய் அரசு தருகிறது. ஆயிரம் ரூபாய் மான்யம் தரப்படுகிறது. கட்டுப்பாட்டு விலையில் சிமெண்ட் மூட்டை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

இவ்வகையில் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பரவலாக 522 வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில்472 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

இதுவும், தன்னிறைவுத் திட்டத்தின் ஒரு கூறாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி கட்டப்படும் வீடுகளின் சொந்தக்காரர்கள் ரூ.600 கூலிக்குத் தகுந்த வேலையைத் தாமே செய்தாகவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்திட்டம் பற்றி, த. முருங்கைப்பட்டியைச் சேர்ந்த கே. குப்பன், ஏ. கூனிமுத்து ஆகியோரிடம் பேசியபோது - ''நமக்காக ஒரு வீட்டை நாமேகட்டிக்கொள்ளப்போகிறோம் என்று நாங்கள் கனவுகூடக் கண்டதில்லைங்க. உள்ளபடியே இது ரொம்பவும் ஒசத்தியான ஏற்பாடுங்க'' என்று உளமாரப் புகழ்ந்தார்கள்.

—இந்த மூன்று வட்டாரங்களைக் கண்டதே, திருச்சிமாவட்டம் முழுமையையும் பார்த்துவிட்ட திருப்தியை எங்களுக்கு உண்டாக்கின!

பின் ஒரு பகுதியான ஆனந்தனாறு மற்றும் அதன் பிரிவு கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் தற்போது அரசால் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட இருக்கிறது. கோதையாற்றின் குறுக்கே உள்ள திருப்பரப்பு அணைக்கட்டின் வடபுறக் கால்வாயை விரிவு படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் சேலம், திருச்சி மாவட்டங்களில் பாயும் காவிரியின் பாசனக் கால்வாய்கள், கீழ் பவானித் திட்டக் கால்வாய், சாத்தனூர் நீர்த் தேக்கத்தின் கீழ் பெண்ணையாற்றுக் கால்வாய்கள், கோதையாற்றுப் பாசன முறை, கீழ்கொள்ளிடம் பாசன முறை, மணிமுத்தாறு பிரதானக் கால்வாய், தாமிரபரணியார் பாசன முறை முதலியவைகளை நவீனப் படுத்துதல் மற்றும் கல்லணைக் கால்வாய்க்குப் பூச்சு வேலை செய்யும் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட உள்ளன.

தமிழ்நாட்டில் 37,000 ஏரிகளுக்கு மேல் உள்ளன. அவைகளில் பெரும்பாலானவை மிகப் பழமையானவையாகும். இவைகளில் நீர்க் கட்டுப்பாடு முறையில்லாமையாலும், திறமைக் குறைவான விநியோக முறையாலும் நீர் உபயோகத்தின் மிகவும் குறைவாக உள்ளது. இம்முறையில் முன்னமேயே பாசனம் பெறும் விளை நிலங்களின் பாசனத் திறனை அதிகரிக்கும் பொருட்டு ஏரிப் பாசனத்தை நவீனப்படுத்துதல் மிகவும் அத்தியாவசியமாகிறது.

இத்திட்டத்தின் கீழ் (1) ஏரியின் வரத்துக் கால்வாயையும், வினியோகக் கால்வாயையும் மேம்படுத்துதல், (2) ஏரியையும் அதைச் சேர்ந்த கரை, மதகு, வழிந்தோடிகளையும் மேம்படுத்துதல் (3) பாசன பிரதான கால்வாய்களையும், அதன் உட்பிரிவுகளையும் நவீனப்படுத்துதல் (4) விஞ்ஞான முறையில் நீர்ப்பங்கீடு கண்காணிப்பு முறை ஆகியவைகளை அமல்படுத்துதல் (5) மேம்பட்ட விவசாய முறைகளைக் கையாளுதல் மற்றும் விவசாயப் பணிகளுக்கான அமைப்புகளை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.

முதற்கட்டமாக 500 ஏக்கருக்கும் அதிகமான பாசனப் பரப்பு கொண்ட சுமார் 490 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் ரூ.120 கோடி செலவில் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முன்னோடியாக, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பிள்ளைப்பாக்கம், ஏரியையும், இராமநாதபுரம் ஏரியையும் செயல்முறைப் படிப்பினையாக மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. பிள்ளைப்பாக்கம் ஏரியின் வேலைகள் தற்போது நடைபெறுகின்றன. உலக வங்கியின் ஆலோசனைப்படி இவை நடைபெறுகின்றன. இவைகளை நிறைவேற்ற உலக வங்கியிடம் உதவி கோரப்படும்.

பண்ணை மேம்பாட்டு வேலைகள் ஆயக்கட்டுப் பகுதியில் பல துறைகளும் இணைத்துச் செயல்படுத்த வேண்டியதால் புது திட்டங்களில் தேவையான முக்கியத்துவம் பெறுவதில்லை. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் விரிவான பணிகளாவன:

1. பயிர்களின் தன்மையைப் பொறுத்து அவைகளின தேவைக்கேற்ப பாசன நீரை தக்க சமயத்தில் ஒதுக்கீடு செய்து வினியோகிப்பதால் அதிக விளைச்சல் பெறலாம்.
2. பாசன ஆதாரத்தின் தலைப்புப்பகுதியில் உள்ளவர்களைப் போல் கடைநிலைப் பகுதியிலுள்ளவர்களுக்கும் சீரான நீர் வினியோகித்தல்.
3. பாசனத் திறனை அதிகரித்து விவசாய உற்பத்தி பலனை அடைதல்.
4. நாளாவட்டத்தில் நில வளத்தன்மை, மண் அரிப்பு நிலச் சத்துக்குறைதல், நீர் தேங்கும் தன்மை, மண் உப்புத் தன்மை, நில அமைப்பு சீர்கேடு இவைகளைத் தவிர்த்து உற்பத்தித் திறனை வெகு நாட்களுக்கு அடைதல்.
5. பாசன முறைகளைக் குறைந்த செலவில் பாதுகாத்து இயக்குதல்,
6. பாசன முறையை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான மசோதாக்களை நிறைவேற்றுதல்.
7. நீர் கண்காணிப்பு முறைக்க்கான விதிமுறைகளை விவசாயிகளின் மத்தியில் அமல்படுத்துவதன் மூலம் திட்ட நிர்வாகத்தில் நீதியையும், சம பங்கீட்டு முறையையும் நிலைநிறுத்துதல்.

இவ்வாறாக, பண்ணை மேம்பாடுவேலைகளால் பாசனப்பகுதிகளில், பல நவீன விஞ்ஞான, தொழில் முறைகளை அறிமுகப் படுத்துவது போன்றவை திட்டத்தில் இடம் பெறுதல் அவசியம்.

பாசனப் பரப்பிற்குட்பட்ட ஒவ்வொரு நில உடைமையாளர் யும், கால அளவையும், அங்கீகரித்தப்படி அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த முன்னறிவிப்பால் ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய விவசாய செயல் முறையைத் திட்டமிட்டு வாங்க வேண்டியவைகளை வாங்கி உபயோகிக்க ஏதுவாகிறது. இதனால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் நீரைப் பயன்படுத்தத்தக்க வகையில் உபயோகிக்க ஊக்கமேற்படுகிறது. இதனால் வினியோகிக்கும் நீரைப் பெரும் விரையமில்லாமல் நன்முறையில் உபயோகிக்க முடிகிறது.

தற்போது வாரபந்தி அல்லது முறைப் பங்கீடு இம்மாநிலத்தின் பாசன திட்டங்களில் இடம் பெறுவதில்லை. இப்புது முறையைப் படிப்படியாகத்தான் செயல்படுத்த முடியும். பெரியார் வைகை பாசன முறையை நவீனப்படுத்தும் திட்டம் முடிந்ததும் இம்முறையை அமல்படுத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1980-1985 )ரூபாய் 23 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இவை நீங்கலாக ஆழ் மட்டத்தில் உள்ள நிலத்தடி நீரை குழாய்க் கிணறுகள் மூலம் வெளிக்கொணர்ந்து பாசனத்திற்குப் பயன் பயன்படுத்தவும் ஒரு திட்டத்தை தம்முடைய மாநில அரசு மேற்கொண்டிருக்கிறது. நிலத்தடி நீரை வெளிக் கொணர்வது என்பது சிறு விவசாயிகளால் இயலாதகாரியம். அதிலும் குறிப்பாக சிறிய அளவே உள்ள நிலத்தடி நீரை நல்ல முறையில் சிக்கனமாக பயன்படுத்துவது அவசியமானதாகும்.

இதற்காக சமுதாயக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, மாநிலக் குழாய்க்கிணறுக் கழகம் என்ற அமைப்பின் மூலம் நிர்வகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகம் குழாய்க் கிணறுகளை அமைத்து, விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு நீர்வழங்குவதுடன், தண்ணீர்த் தீர்வையையும் வசூல் செய்யும் இக்கழகம் விரைவில் அமைக்கப்பட அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

இப்படி நம்முடைய மாநிலத்தில் அடுத்து வரும் ஆண்டுகளில், 440 கோடியே12இலட்சம் ரூபாய் செலவில் நவீனப் பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.


இதன்மூலம் உணவு உற்பத்தியில் தமிழகம் ஓர் உபரி மாநிலமாக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

[19-4-81—சென்னை வானொலி[

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


இயற்கை அழகுக்கு
இணை இதுவே!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

# தன்னிறைவுத் திட்டப் பணிகள்


குடி நீர் வசதி


சிறு பாலம்


தாய் சேய் நலவிடுதி


ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள்


ஆதிதிராவிடர் குடியிருப்பு மயானப் பாதை


சமுதாய மன்றம்


பள்ளிக் கட்டிடம்


கிரா ... ருந்தகம்


இணைப்புச் சாலை